



# சுவடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவடுகளின் சந்தா பற்றி அடிக்கடி நினைவுறுத்த வேண்டியிருக்கிறது. பலர் இன்னும் சந்தா செலுத்தவில்லை. சிலரது சந்தா ஏற்கெனவே முடிந்துவிட்டது. சுவடுகள் மிகுந்த நிதி நெருக்கடியை எதிர்நோக்குவதால் தயவு செய்து உங்கள் சந்தாப் பணத்தை உடன் அனுப்பி உதவுமாறு அன்போடு வேண்டுகிறோம்.

சுவடுகள்




சுவடுகள் சந்தா விகிதம்

நோர்வே, சுவீடன், டென்மார்க் 300 NKR

ஐரோப்பிய நாடுகள் 400 NKR

ஏனைய நாடுகள் 500 NKR

வங்கிக் கணக்கிலக்கம் 160752 16032

SUVADUHAL
Herslebs Gate 43
0578, Oslo 5

அட்டைப்படம்: H.SAXGREN . 2MAJ/SAMFOTO, நன்றி: Det Nye Oslo, 8/1990

<u>ஒரு மன்னிப்பு</u>

சுவடுகள் ஐப்பசி இதழில் வெளியாகிய 'கணவன் அமைவதெல்லாம்' என்ற ஆதவனின் சிறுகதையின் உண்மையான தலைப்பு 'ஆண் விடுதலை அல்லது கணவன் அமைவதெல்லாம்' என்பதே. தவறான புரிந்து கொள்ளல் காரணமாக எம்மால் இத்தவறு இழைக்கப்பட்டது. இதனால் கதையை எழுதிய ஆதவனுக்கும், வாசகர்களுக்கும் ஏற்பட்ட இடையூறுகட்கு மனம் வருந்துவதோடு மன்னிப்பும் கோருகிறோம்.

சுவடுகள்

## அடுத்த சுவடுகள் இதழில்

* 'தேவை ஒரு பத்திரிகை' - ஐரோப்பியச் சூழலில் ஒரு பொதுப் பத்திரிகைக்கான தேவையும், நியாயங்களும் - சில குறிப்புகள்.
* 'ஒரு வித்தியாசமான தொலைபேசி அழைப்பு' - நடையரின் பார்வையில்
* சேரனின் 'எலும்புக் கூடுகளின் ஊர்வலம்' கவிதைத் தொகுதி பற்றி பேராசிரியர் சி.சிவசேகரம் அவர்களின் விமர்சனம்.
* றிச்சர்ட் டி சொய்சா - உதிர முடியாத ஒரு நினைவு
* 'இலக்கியப் பிச்சை' - இத்தாலியச் சிறுகதை
* நோர்வேயில் வெளிநாட்டவர் தொடர்பாக உருவாகியுள்ள புதிய சட்டங்கள்
* ராஜினி திரணகம நினைவாக.. சில உரைகளின் சில பகுதிகள்

# 1990 - சில பதிவுகள்



ஜனவரி

* அமெரிக்கா பனாமாவை ஆக்கிரமித்தது. பனாமா அதிபர் நொறியேகா சரணடைந்தார். * அஸர்பைஜானியர்களுக்கும் ஆர்மேனியர்களுக்கும் இடையே நாகொணா-கறபாக் பகுதிகளில் மோதல்கள் நிகழ்ந்தன. * நோர்வேயில் வேலையில்லாதோரின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டியது. * யூகோஸ்லாவியாவின் கொஸவோ மாநிலத்தில் பெரும் கலவரங்கள் நிகழ்ந்தன.

பெப்ரவரி

* 27 வருட சிறைவாசத்தின் பின் நெல்சன் மண்டேலா விடுவிக்கப் பட்டார்.

மார்ச்

* காஷ்மீர் மானிலத்தில் தீவிரவாதிகளின் போராட்டம் ஆரம்பமாகியது. * பொரிஸ் பெஸ்ட்சீனின் நூல் நொஸ்க் மொழியில் வெளியாகியது. * ஒஸ்லோவில் நோர்வேயின் முதலாவது நுரையீரல் மாற்றுச் சிகிச்சை மேற்கொள்ளப் பட்டது. * ஐரோப்பாவின் உயரமான ஹோட்டல் 'ஒஸ்லோ பிளாசா' ஒஸ்லோவில் திறக்கப்பட்டது. * ஆபிரிக்காவின் காலனித்துவ நாடான நமீபியா சுதந்திரம் பெற்றது. * 45 வருட காலத்தில் ஹங்கேரியின் முதலாவது பொதுத் தேர்தல் நிகழ்ந்தது. * நேபாளத்தில் மக்களின் தொடர்ச்சியான போராட்டங்களால் மன்னர் தனது அதிகாரங்கள் சிலவற்றை விட்டுக் கொடுக்க நேரிட்டது.



1990 - சில பதிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நோர்வேக்கும் டென்மார்க்கிற்கும் இடையே சேவையில் ஈடுபட்டிருந்த 'ஸ்கன்டினேவியன் ஸ்ரார்' கப்பல் எரிந்து 158பேர் மரணமடைந்தனர். * நோர்வே யுவதியான மோனா குறுட் உலக அழகியாகத் (Miss Universe) தெரிவு செய்யப்பட்டார். * நோர்வேயின் மிகப் பெரிய வங்கிகளில் இரண்டு (DnC, BergenBank) Den Norske Bank என்ற பெயரில் இணைந்தன. * பிராங்க் றீட் என்ற பணயக் கைதி லெபனானில் இருந்து 43 மாதங்களின் பின் விடுதலையானார்.

மே

* லத்வியக் குடியரசு சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சுயாட்சிப் பிரகடனம் செய்தது. * போர்கனில் சூழல் தொடர்பான உலக மாநாடு நடத்தப் பட்டது. * வடக்கு தெற்கு யெமன்கள் ஒரு நாடாக இணைந்தன. * பூமியதிர்ச்சி ஒரே தினம் பெருவையும், ருமேனியாவையும் பாதித்தது.

யூன்

* செக்கோஸ்லவாக்கியாவில் People's forum கட்சி தேர்தலில் வென்றது. * நோர்வேயில் பத்திரிகையாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இவர்கள் வெளியிட்ட 'Avisa' பத்திரிகை ஒரு நாள் வெளியிடப்பட்டது. நோர்வே தொலைக்காட்சி, வானொலி வேலை நிறுத்தங்களும் நிகழ்ந்தன. * ஈரானில் நில அதிர்ச்சியில் பெருமளவு உயிர்ச் சேதங்கள் நிகழ்ந்தன.

யூலை

* யூகோஸ்லாவியாவின் ஸ்லொவேனியா தனிநாட்டுப் பிரகடனம் செய்தது. * நோர்வேயில் 1000 குறோணர் தாள் புதிய அமைப்பில் வெளியிடப் பட்டது. * கிழக்கு ஜேர்மன் நாணயம் நடைமுறையில் இல்லாதொழிந்தது. * ஐரோப்பிய சமூகத்தில் அங்கத்துவம் பெற சைப்பிரஸ் விண்ணப்பித்தது. * மொங்கோலியாவில் முதல் முறையாக தேர்தல் நிகழ்ந்தது.



ஓகஸ்ற்

* ஈராக் குவைத்தினுள் படையெடுத்து அதை ஆக்கிரமித்தது. * பெனாசிர் பூட்டோ பாகிஸ்தானின் பிரதமர் பதவியை இழந்தார். * 'டாக்பிளா(த)' பத்திரிகை முதல் தடவையாக ஞாயிறு நாட்களிலும் பத்திரிகை வெளியிட்டது.

செப்டம்பர்

* அமெரிக்க ரஷ்ய உச்சி மாநாடு ஹெல்சிங்கியில் நடைபெற்றது.

நவம்பர்

* இந்தியாவில் வி.பி.சிங்கின் சிறுபான்மை ஆட்சி கவிழ்ந்து சந்திரசேகரின் சிறுபான்மை ஆட்சி ஏற்பட்டது. * பிரிட்டனில் மார்கிரட் தட்சரின் பிரதமர் பதவியும் கட்சித் தலைவர் பதவியும் ஜோன் மேயரிடம் கைமாறின.

டிசம்பர்

* போலந்தின் ஜனாதிபதி தேர்தலில் லெச் வலீசா மீண்டும் ஜனாதிபதியானார். * ஐரோப்பிய சமூகத்தின் உச்சி மாநாடு றோமில் நிகழ்ந்தது. * சோவியத் அதிபர் குர்பச்சேவுக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. * அல்பேனியாவில் அரசியல் மாற்றம் கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## *1990 - சில பதிவுகள்*

தொகுப்பு நந்தன்



*R. Pathmanaba Iyer*
*27-B High Street*
*Plaistow*
*London E13 0AD*
*Tel: 020 8472 8323*

# சுவடுகள்

மார்கழி மாதம் தமிழர்களைப் பொறுத்தவரை விழாக்காலம் என்றே கருதப்படக் கூடியது. மார்கழியின் திருவெம்பாவையும், மார்கழி மாதத்தின் முடிவில் வரும் தைப்பொங்கலும் மாத்திரமன்றி உலகெங்கும் கொண்டாடப்படும் யேசுபாலனின் பிறப்பும், புதுவருடமும் தமிழரும் கொண்டாடும் விழாக்களாகிவிட்டன. பொங்கலோ, திருவெம்பாவையோ கொண்டாடும் நிலையில் இல்லாவிட்டாலும் ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்த தமிழர்களின் வாழ்வில் நத்தார் பண்டிகையும், தொடரும் புதுவருடமும் தவிர்க்க முடியாத பண்டிகைகளாகிவிட்டன. விழாக்காலம் என்பதைவிட இந்தக் காலங்கள் எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் கொண்டுவரும் காலங்கள் என்பதே அதிகம் பொருத்தமுடையது.

ஒவ்வொரு நாளும் போல வருடப் பிறப்பும் சாதாரண நாளே. எனினும் புதிய வருடம் பிறக்கிறது என்ற உணர்வும், புதிய வருடம் வளங்களையும் நலங்களையும் சேர்க்கவேண்டும் என ஒவ்வொரு வீட்டிலும் தோன்றும் ஆவலும் நியாயமானவை.

பல எதிர்பாராத மாற்றங்களைக் கொண்டுவந்த ஒரு வருடம் போய் இன்னும் ஒரு புதிய வருடம் தோன்றியிருக்கிறது. கடந்த ஒரு வருட காலத்தில் மக்கள் அனுபவித்த துயரங்கள் சற்றுக் குறையும், மக்களுக்குச் சற்று ஆறுதல் கிடைக்கும் என சில ஒளிக் கீற்றுகள் தெரிகின்றன. இவ்வாறான தோற்றம் மாயத் தோற்றமா என்ற பயம் கலந்த கேள்வியும் கூடவே எழுகிறது.

மார்கழி மாதத்தில் புலிகள் அறிவித்த யுத்த நிறுத்தம் அரசால் தொடர்ச்சியாக மீறப்படுவதாகப் புலிகளும், புலிகளால் மீறப்படுவதாக அரசும் அறிவிப்பது தொடரக்கூடிய யுத்த அபாயத்தினையே சுட்டிநிற்கின்றது. யுத்தம் மக்களை விரக்திக்குத் தள்ளிவிட்டது என்பதை, யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்ட உடன் பாதுகாப்பான இடம் நோக்கி இடம்பெயர்ந்த மக்கள் தொகை கோடிட்டுக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசுடன் சிறுபான்மை இன மக்களின் அடிப்படை உரிமைகளைப் பேசிப் பெற முடியுமா என்பது கடந்த காலங்களில் பலமான கேள்வியாக இருந்து வருகின்றது. ஆனால் உலகில் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்ட வரலாற்றில் பேச்சுவார்த்தைகள் பல நிகழ்ந்துள்ளன. இவை எதிரியின்மீது தார்மீகச் சுமையைச் சுமத்தக் கூடியவை; எதிரியின் முகத்திரையைக் கிழிக்கக்கூடியவை. ஆனால் எமது போராட்ட வரலாற்றில் பேச்சுவார்த்தைகள் கொண்டுவந்த விளைவுகள் வேறுவிதமானவை. எல்லாப் பேச்சுவார்த்தைகளும் நிர்ப்பந்தம் காரணமாகவோ, தமது இருப்பைக் காப்பதற்காகவோதான் நிகழ்ந்துள்ளன. இது தமிழ் பேசும் மக்களின் தொடர்ந்த அவலங்கட்கு முக்கிய காரணமாக இருந்துவந்துள்ளது.

சர்வதேச ரீதியில் யுத்த நிறுத்தத்திற்கும், பேச்சுவார்த்தைக்குமான குரல்கள், பல சக்திகளாலும் கடந்த காலங்களில் எழுப்பப்பட்டு வந்துள்ளன. அப்போதெல்லாம் யுத்த நிறுத்தத்தை மறுத்து வந்ததில் இரு தரப்பினர்க்கும் பங்குண்டு.

உலகப் பொது நிறுவனங்கள் பலவும், அரசுகளும் கேட்டபோது யுத்த நிறுத்தம் செய்ய மறுத்த புலிகள் தற்போதாவது யுத்த நிறுத்தம் செய்வதாக அறிவித்தமை வரவேற்கக் கூடியதே. ஆனால் இந்த யுத்த நிறுத்தத்தையாவது ஆக்கபூர்வமான, பகிரங்கமான பேச்சுகட்கு அவர்கள் பயன் படுத்துவார்களா என்ற கேள்வி ஒவ்வொருவர் மனதிலும் எழுகிறது.

கடந்த கால அனுபவங்களையும் மனதில் கொண்டு மக்களின் நலனையும் தேசத்தின் நலனையும் மாத்திரம் முதன்மைப்படுத்தும் பகிரங்கமான பேச்சுகள் தொடங்க போராட்டத்தில் அக்கறையுள்ள அனைவரும் தம்மால் இயன்ற வழிகளில் முயலவேண்டியது அவசியமாகும்.

இலங்கை அரசுடன் இணைந்து நிற்பதால் எமது பிரச்சனைகள் தீர்க்கப்படும் என்றோ, எமது உரிமைகள் கிடைத்துவிடும் என்றோ யாரும் கருதினால் அவர்கள் தற்போது செய்யக்கூடியதெல்லாம் இலங்கை அரசை தாக்குதல்களை நிறுத்தச் செய்து ஆக்கபூர்வமான பகிரங்கப் பேச்சுகளில் அரசையும், இலங்கையின் சகல இன அரசியற் குழுக்களையும் இறங்குமாறு தூண்டுவதாக மாத்திரமே இருக்க முடியும்.

எதிர்பார்ப்புகளின் காலம் இருளை நோக்கி மக்களை நடத்தும் காலமாக வளரக்கூடாது. அவ்வாறு வளர்ப்பவர்கள் மக்களால் மன்னிக்கப்படப் போவதில்லை.

சுவடுகள்24
மார்கழி'90 - தை'91

'Suvadukal' - Herslebsgate 43, 0578 Oslo 5, Norway

சுவடுகள்



*இங்கே வாழும் எம்மவர்கள்: (1)*

# புற்றுநோய்க் கண்டுபிடிப்பில் கணனியின் பயன்பாடு

## எம்மவர் கனகசிங்கம் யோகேசனின் சாதனைப் பயணம் ஆரம்பம்!



ஒஸ்லோப் பல்கலைக் கழகத்தின் கணனித்துறையில், நோர்வீஜியர்களையே ஆச்சரியப்படுத்தும் விதத்தில் அதிதிறமையான பெறுபேறுகளைப் பெற்று, கணனித்துறையில் முதுமானிப் பட்டம் பெற்ற முதலாவது இலங்கை மாணவரான கனகசிங்கம் யோகேசனை(27) சுவடுகள் சார்பில் சந்தித்தேன். சுவடுகளில் புதிதாக ஆரம்பித்திருக்கும் இத்தொடர்பற்றி விளக்கியதும், இயல்பிலேயே கூச்ச சுபாவம் உள்ள யோகேசன் முதலில் தயங்கினாராயினும், நான் அதன் அவசியத்தை விளக்கியதும் இத்தொடரில் இடம்பெற ஒருவாறாக ஒப்புக்கொண்டார்.

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மாணவரான கனகசிங்கம் யோகேசன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை ஆரம்பித்தபோதும் நாட்டு நிலைமை காரணமாக அங்கு கல்வியைத் தொடரமுடியவில்லை. அதனால் 1984ம் ஆண்டு நோர்வேவந்து ஒஸ்லோப் பல்கலைக் கழகத்தில் தனது கல்வியைத் தொடர்ந்தார். முதுமானிப் பட்டத்திற்காக கணனியைப் பயன்படுத்தி, பிரதிமைப் பதப்படுத்தலூடாக (Image Processing) புற்றுநோய்க் கலங்களைக் கண்டுபிடிப்பது பற்றி இவர் எழுதிய ஆய்வுக்கட்டுரை இவருக்குச் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொடுத்தது மட்டுமல்லாமல், இத்துறை தொடர்பான வட்டாரங்களில் இவரது திறமையை அறிமுகப்படுத்தியது. இதன் காரணமாக நோர்வேயின் பிரபல்யம் வாய்ந்த ரேடியம் மருத்துவமனை (Radium Hospital) ஒரு விஞ்ஞான ஆய்வாளராக இவரை நியமித்து இவரது ஆய்வுகளுக்கு உற்சாகம் அளித்து வருகின்றது. இன்னும் சில மாதங்களில் கலாநிதிப் பட்டப்படிப்பினைத் (Ph.D) தொடரவிருக்கும் யோகேசனிடம் "வழமையாக எமது தேசத்துக் கல்விமான்கள் செய்வதுபோல் வெளிநாடுகளிலேயே தங்கிவிடுவீர்களா?" என்று கேட்டபோது "ஊரிலபோய் அது செய்யவேணும்..இது செய்யவேணும் என்று ஏராளம் கனவுகளிருக்கு..ஆனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது எப்ப சாத்தியப்படும் எண்டு நினைக்கிறீர்?" என்று என்னைக் கேள்வி கேட்டு, என்னைப் பேட்டி காண முயன்றார்.

"இந்தப் ·பிரதிமைப் பதப்படுத்தல்(Image Processing) பற்றியும் அது எப்படி புற்றுநோய்க் கலங்களைக் கண்டுபிடிக்க உதவுகிறது என்பது பற்றியும் எல்லோருக்கும் விளங்கிற விதத்தில் சொல்லுங்கள்" என்று கேட்டேன்.

"ஓ..இந்த இமேஜ் புரஸஸிங்... இத நீங்க சொல்லுற மாதிரி 'பிரதிமைப் பதப்படுத்தல்' எண்டு தமிழில மொழிபெயர்க்கிறது சரியா எண்டு எனக்குத் தெரியாது.. ஆனா இது ஒரு அருமையான தொழில்நுட்பம்.." என்றவாறு அரம்பித்தார்.

"நமக்கு எல்லாருக்கும் தெரிந்த உதாரணம் ஒன்று சொல்லுறன்.. இப்ப நீர் ஐம்பது கிலோ மீற்றர் வேகத்தில போகவேண்டிய ரோட்டில எழுபதில உம்மட காரை ஓட்டிக் கொண்டுபோறீர் எண்டு வையுமன்.. ரோட்டில இருக்கிற ஒட்டமறறிக் கமரா உம்மட காரைப் படம் எடுக்கும் எண்ட விசயம் உமக்குத் தெரியும்.. ஆனா அந்தப் படத்தை நீர் பார்த்தீரெண்டா உமக்கு உம்மட காரின்ர நிறமோ அல்லது நம்பரோ தெரியாது.. ஒரு கலங்கலான, தெளிவில்லாத படமாயிருக்கும்.. ஆனால் அந்தப் படத்தை இமேஜ் புரஸஸ் பண்ணிப்பார்த்தால் காரின்ர நிறம், நம்பர் மட்டுமில்ல..மினக்கெட்டா உம்மட முகத்தைக்கூட பாக்கலாம்.." என்றார்.

"ஓ.. அப்ப பூதக்கண்ணாடி மாதிரி எண்டு சொல்லுங்களன்.." என்று நான்.

"இல்லை ஐஸே! மனிசற்ற கண்ணுக்கு, பூதக் கண்ணாடியளுக்கு, கமராக்களுக்கு பிடிபடாத இமேஜ்(Image = பிரதிமை)களை இ.பு.ஆல பார்க்கலாம்... ஒரு படத்தை இ.பு.பண்ணிப் பாக்க அந்தப்படத்தை புள்ளியளாகப் பிரிக்கிறம்.. அந்தப் புள்ளியளை பிக்ஸல்(Pixel) என்று சொல்லுறது.. ஒரு படத்தில இருக்கிற எல்லாப் புள்ளியளுக்கும் ஒவ்வொரு நிறமிருக்கும்.. அந்த நிறங்களுக்கு ஒவ்வொரு இலக்கத்தைக் கொடுக்கிறம்.. அந்த இலக்கங்களை கொம்பியூட்டர் சேமித்து வைச்சிருக்கும்.. பிறகு அந்த இலக்கங்களை பல்வேறு முறைகளூடாக மாற்றி மாற்றிப் பார்க்கிறபோது கலங்கலில்லாத, நல்ல தெளிவான ஒரு படத்தை நம்மால பார்க்க முடியுது. இதுதான் இ.பு.வின்ர அடிப்படை. இந்த அடிப்படையில ஏராளம் வேலயள் இப்ப செய்யினம்.. உதாரணமா சற்றலைற்(Satelite) எடுக்கிற படங்களை நாம பார்த்தா நமக்கு ஒண்டும் விளங்காது.. எல்லாம் ஒரே புள்ளிபுள்ளியாகத் தெரியும்.. அத இ.பு.பண்ணிப்பார்த்தால் விபரங்கள் தெளிவாத் தெரியும்.. இப்பிடித்தான் எதிரி நாட்டு நடவடிக்கையளைக் கண்காணிக்கீனம்.. மற்றது இப்ப கையெழுத்தைக் கண்டுபிடிக்கத்தான் பரவலாப் பயன்படுத்தப்படுகுது.... உதாரணமா நாம பாங்கில கையெழுத்து போலியில்லை எண்டு உறுதிப்படுத்த இ.பு.முறையைத்தான் கையாளீனம்.. நூறு, நூற்றைம்பது வருட பழசான புகைப்படங்கள புதுப்பிக்கிறதுக்கும் இந்தமுறை உதவுது.. மங்கல் தன்மையைப் போக்க நொய்ஸ் றிமூவல் (Noise




Removal) முறையைப் பயன்படுத்துகிறோம்.. (இங்கு Noise எனப்படுவது ஒலியுடன் தொடர்புடையதல்ல. பிரதிமைகளில் காணப்படும் பிசிறுகளைக் குறிப்பிடும். இவ்வாறு பிசிறுகளை அகற்றும் Noise Removalக்கு "பிசிறகற்றி" என்று வேண்டுமானால் மொழி பெயர்த்துக் கொள்வோம்; தற்காலிகமாக.) " என்று



கூறிவிட்டு "விளங்குதா?" என்று கேட்டார்.

எனக்கு விளங்கின மாதிரியும் இருந்தது. விளங்காதது மாதிரியும் இருந்தது. " அது சரி.. புற்றுநோய்க் கலங்களை கண்டுபிடிப்பது பற்றி.." என்று நான் ஆரம்பிக்கமுன் அவர் விளக்க ஆரம்பித்தார்.

"இதுக்கும் அடிப்படை ஒன்றுதான் ஐஸே! ஒரு கலத்தைப் (Cell) பிரித்தெடுத்து எலக்ரோன் மைக்ரோஸ்கோப்பில்(Electro Microscope) வைக்கும்போது அதன் அடிப்பாகத்தில இருக்கிற கமரா அந்தக் கலத்தை படமெடுத்து கொம்பியுட்டருக்கு அனுப்ப, இ.பு. அந்தப் படத்தை



டிஜிற்றலைஸ்ட்(Digitalized = எண்வடிவிலான புள்ளிகளாக்கல்) பண்ணி புள்ளிகளாக்கும். அதற்குப் பிறகு நாங்கள் அந்தப் படத்தை பாதிக்கப்படாத கலங்களின் படத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறது மூலம் புற்றுநோய்க் கலங்களை அடையாளம் காணலாம். இப்ப உதாரணமாக நான் செய்தது மாதிரி ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்ட சுண்டெலியின்ர ஈரற் கலத்தை பாதிக்கப்படாத கலங்களுடன் ஒப்பிட்டபோது இரண்டுக்குமிடையில ரெக்ஸ்சர் (Texture = மேற்பரப்பு) வேறுபாடுகளைக் காணலாம். படத்தில(படம் 2) கறுப்பாகச் செறிந்திருக்கும் இடம் , அதாவது 'மலிக்னன்ற்செல்'களை (Malignent Cell = கட்டுப்படுத்த முடியாமல் வளரும் கலங்கள்) காட்டுது. இந்த முறையில நோய்க்கான அடையாளங்கள முன்னமாதிரி இல்லாமல் உடன கண்டுபிடிக்க முடியும்.. மற்றது ஆரம்ப நிலையில இருக்கிற பாதிக்கப்பட்ட கலங்களை (PreMalignant Cell) ஈஸியாக் கண்டுபிடிக்க முடியும்.. " என்றார்.

"இந்த முறையை நமது நாட்டில பயன்படுத்திறது சாத்தியமா?" -நான் கேட்டேன்.

"சாத்தியமில்லாமல் இல்லை.. ஆனால் செலவுதான் நம்மால சகிக்கேலாது.. இங்கேயே இப்பத்தான் உலவால் சீக்கஹஸ் (Ullaval Sykehus) 10 மில்லியன் குரோணர் செலவழித்து ஒரு எலக்ரோன் மைக்ரஸ்கோப் வாங்கியிருக்கினம்.. அந்தளவு செலவளிக்க நம்மால முடியுமா? அனா இ.பு. முறையை விவசாயம் போன்ற துறைகளுக்கு அதிக செலவில்லாமல் பயன்படுத்தலாம் " என்றார்.

"அதெப்படி விவசாயத்திற்கு.." என்று நான் இழுத்தேன்.

"இப்ப ஒரு பெரிய நெல் விளையிற பிரதேசத்தை ஆகாயத்தில இருந்து படம் எடுக்கிறம் எண்டு வையுமன். எங்கட கண்ணுக்குப் பச்சைப் பசேலென்று தெரியிற இடங்கள் இ.பு.பண்ணிப் பாக்கும்போது வித்தியாசமான நிறங்களில தெரியும்.. ஒரு குறிப்பிட்ட இடத்தில பயிர்களின்ர நிறத்தில சின்ன வித்தியாசம் இருந்தா அந்த இடத்தில பயிருக்கு நோய் பிடிச்சிருக்கு அல்லது அந்த மண்ணில ஏதோ ஒரு குறைபாடு இருக்கு என்கிற மாதிரி முடிவுகளை எடுக்கலாம். இத ஒரு உதாரணமாத்தான் சொன்னனான்.. இப்பிடி ஏராளம் வேலயள் செய்யலாம் ஐஸே!" என்றார்.

விஞ்ஞானத்தின் புதுமைகளை எண்ணி வியந்தபடி, இவற்றையெல்லாம் நாம் எப்போது பயன்படுத்தப்போகின்றோம் என்ற ஏக்கத்துடன் அவரிடமிருந்து விடைபெற்றேன்.

-திருவாளர் நிருபர்.

*"அவர் சந்நியாசியாகி விட்டார். பலநாளா வாயே திறப்பதில்லை, மௌன விரதம். கடைசி காலத்திலை இப்பிடித் திருந்துவார் எண்டு நான் நினைக்கவேயில்லை..."*


*"நீர் ஒண்டு!... அவர் திருந்தவும் இல்லை, சந்நியாசி ஆகவுமில்லை. இயக்கஞ் செய்த கொலைகளை நேரிலை கண்டவராம். இது தெரிஞ்சு இயக்கம் அவரை வாயே திறக்கக்கூடாது எண்டு 'வோணிங்' குடுத்துட்டுது அதுதான்..."*

*- தேசபக்தன் -*



# சுவர் இருந்தால்தான்

- செல்வரத்தினம் -



இலங்கை சுதந்திரம் அடைந்ததாகச் சொல்லப்படும் 1948ல் இருந்து இன்றுவரை சிங்களப் பேரினவாத அரசு படிப்படியாகத் தமிழர்களது உரிமைகளைப் பறித்து, உடமைகளை அழித்து அவர்களின் வாழ்நிலை மற்றும் அவர்களது இருப்புக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த வகையில் தமிழர்களது பாதுகாப்புக்கும் இருப்புக்கும் அச்சுறுத்தலாக அமைவது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களாகும். இதன் மூலம் தமிழர்களது பாரம்பரியப் பிரதேசங்களில் இருந்து அவர்களைத் துரத்தியடித்து தமிழர்களது பெரும்பான்மை நிலை அவ்விடங்களில் குறைப்பதே அரசின் நோக்கமாக உள்ளது. இந்நடவடிக்கைகள் குறிப்பாக கிழக்கு மாகாணத்திலே பெருமளவில் மேற்கொள்ளப் படுகிறது. இத்தகைய நடவடிக்கைகளை உலகமும் ஏனைய தமிழர்களும் இலகுவில் அறிந்துகொள்ளக் கூடாது என்பதற்காக அரசு மிகவும் அவதானமாக நடந்து கொள்கிறது. புதிய விவசாய, நீர்ப்பாசன, நகரசபை அபிவிருத்தித் திட்டம் என பலவகையான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதாகப் பம்மாத்து விட்டது/ விடுகிறது. இவற்றை அவ்வப்போது புரிந்து கொண்ட சில தமிழ்த் தலைமைகள் குரலெழுப்பி அம்பலப்படுத்தின. ஆனால் அவர்களது சந்தர்ப்பவாதத் தன்மையும் கையாலாகாத் தனமும் இத்தகைய திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு எதிரான உறுதியான போராட்டத்தை முன்னெடுக்க முடியவில்லை.

1987 யூலை இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை மீறி அப்போதைய ஜனாதிபதியும், தமிழ்- முஸ்லீம் மக்கள்மீது தனது இராணுவத்தை ஏவி அவர்களைத் திரள்திரளாகக் கொன்று குவித்தவருமான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் நோக்குடன் முல்லைத்தீவு, திருகோணமலை ஆகியவற்றை சிங்கள மயப்படுத்தல் திட்டத்தை மேற்கொண்டார். இதன் பிரகாரம் மணலாறு எனும் தமிழ்க் கிராமத்தை 'வெலிஓயா' என்று பெயரிட்டு பாரிய சிங்களக் குடியேற்றத்தை மேற்கொண்டார். இதற்கு இலங்கை வர்த்தமானியைக்கூட ஆதாரப்படுத்த முடியும். இதுபற்றி காணி, காணி அபிவிருத்தி அமைச்சு 15.04.88அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தமானியில் செய்தி வெளியிட்டிருந்தது. இதன்படி அரச அதிபர்களின் கண்காணிப்பில் உட்படுத்தாது, அப்போதைய காணி, காணிஅபிவிருத்தி அமைச்சராக இருந்தவரும் பிரேமதாசவினால் தூக்கி எறியப்பட்டவருமான காமினி திஸ்ஸாநாயகாவின் நேரடிக் கண்காணிப்புக்கு உட்படுத்தி, அப்பகுதியை பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனஞ் செய்து எவரும் அப்பகுதிக்குள் அனுமதியின்றி உட்செல்ல முடியாதவாறு பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டது.

இதையடுத்து மன்னார் மாவட்டத்தை சிங்களமயமாக்கும் திட்டத்தின் பிரகாரம் 'மல்வத்துஓயா' அணைக்கட்டுத்திட்டம் தொடக்கப் பட்டதைக் குறிப்பிடலாம். 18மில்லியன் ரூபா செலவில் அணை அமைக்கப்பட்டு 4300 ஏக்கர் புதிய காணிக்கு நீர்ப்பாசன வசதி செய்யப்படுவதாக 'மக்கள் அபிவிருத்தி' விளம்பரஞ் செய்தபடியே பாரிய சிங்களக் குடியேற்றத்தை மேற்கொண்டது. அத்தோடு இவ்வணைத் திட்டத்தின் மூலம் 30,000 ஏக்கர் காணியைத் தரிசுநிலமாக்கி தமிழ்- முஸ்லீம் விவசாயிகளது பொருளாதாரத்தை நிர்மூலமாக்கியது.

இப்படிப் பல குடியேற்றத் திட்டங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இதில் குறிப்பாகக் கூறக்கூடிய இன்னொன்று கடந்த சில மாதங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் 'மாதுறுஓயா'த் திட்டமாகும். இத்திட்டம் பற்றி தமிழ் இயக்கங்களும், சில சிங்களத் தலைவர்களும் குரல் எழுப்பியுள்ளனர். அத்தோடு இதுவரை காலமும் சிங்களக் குடியேற்றங்கள் பற்றி அவ்வளவாக அக்கறை காட்டிக் கொள்ளாத கொழும்புப் பத்திரிகைகள் (அதுவும் தமிழ்ப் பத்திரிகைகள்!!!) இதுபற்றித் தலைப்புச்செய்தி வெளியிட்டும் ஆசிரியர் தலையங்கம் எழுதியும் எச்சரிக்கை வெளியிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மகாவலி 'பி'வலயத் திட்டம் மாதுறுஓயாவின் கீழ் வருகின்றது. இது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்குடா, வெலிகந்தையை ஊடறுத்துச் செல்கிறது. இக் குடியேற்றத் திட்டத்துக்கு களுத்துறை, மொனறாகலை ஆகிய பிரதேசங்களில் இருந்தும் 10,000பேர் வரை தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்த செப்டெம்பர் மாதம் களுத்துறை திருக்குடும்ப கன்னியாஸ்திரிகள் பாடசாலையிலும், மொனராகலை சனசமூக நிலையத்திலும் இக்குடியேற்றத் திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்ட சிங்கள மக்கள் சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது. இச் சந்திப்பின்போது மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி அத்துகோரளை இறுமாப்போடு கூறியதாவது:-

"இந்த மகாவலி குடியேற்றத் திட்டங்களில் குடியேற்றப் படுவதற்காக 1000 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. களுத்துறை மாவட்டத்தில் இருந்து 550 விவசாயக் குடும்பத்தினரும், மொனராகலை மாவட்டத்தில் இருந்து 450 குடும்பத்தினரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். களுத்துறை மாவட்டத்தில் விவசாய நிலத்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. மொனராகலை மாவட்டத்தில் காணியிருந்த போதும் நீர்ப்பாசன வசதிகள் கிடையாது. இந்த இரு மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் இதுவரை மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் குடியேற்றப் படவில்லை. எனவேதான் இந்த மாவட்டங்களில் இருந்து விவசாயிகளைத் தெரிவு செய்திருக்கிறோம். மேலும் 2000 குடும்பங்கள் குடியேற்றப்பட இருக்கிறார்கள். மகாவலி 'பி' வலயத்தில் ஒவ்வொரு குடும்பத்தையும் குடியேற்றுவதற்கு 4இலட்சத்து ஐயாயிரம் ரூபா செலவிடப்படுகிறது. மகாவலி 'சி' வலயத்தில் குடியேறுவோர்க்கு குடும்பம் ஒன்றுக்கு 3இலட்சத்து 75ரூபா செலவிடப்படுகிறது. எனவே இங்கு குடியேறத் தெரிவு செய்யப் பட்டோர் எக்காரணங் கொண்டும் அக்காணிகளை வேறு ஆட்களுக்கு மாற்றமுடியாது, வேறு ஆட்களுக்குக் குத்தகைக்கு வழங்கவும் முடியாது."

இந்தப் பேச்சிலிருந்து அரசின் பல திட்டங்களைப் புரிந்து கொள்ள முடியும். அமைச்சர் களுத்துறை மாவட்டத்தில் விவசாய நிலத்துக்கு பெருந் தட்டுப்பாடு நிலவுவதாகவும், மொனராகலை மாவட்டத்தில் காணியிருந்த போதும் நீர்ப்பாசன வசதி இல்லையென்றும் பம்மாத்து விட முயல்வதும், இப்படியானவர்களை சிங்களப் பிரதேசங்களில் எத்தனையோ செழுமையான இடங்கள் இருந்தபோதும் தமிழ்- முஸ்லீம் மக்களது பாரம்பரியப் பிரதேசங்களில் எத்தனையோ லட்சம் செலவில் ஏன் குடியேற்ற விரும்புகிறார்கள். இவ்வாறு குடியேறும் சிங்கள மக்கள் தமது காணிகளை வேறு யாருக்கும் விற்கவோ கைமாற்றவோ கூடாது என எச்சரிக்கை விடுவதும் ஆழமாக நோக்கப்பட வேண்டியதாகும்.

தற்போது வடக்கிலுள்ள மோசமான நிலமையை சாதகமாகப் பயன்படுத்தி அவசர அவசரமாக சிங்களக் குடியேற்றத் திட்டத்தை செய்துவிட அரசு முயல்கிறது. அத்தோடு 'மாதுறுஓயா' திட்டத்தின்கீழ் கிழக்கு மாகாணப் பகுதிகளில் தமிழர்களும், முஸ்லீம்களும் மாத்திரமே குடியேற்றப் படுவார்கள் என்ற அடிப்படையில்தான் கனேடிய நிதியுதவி கிடைத்தது என்பதும், ஆனால் இன்று இதற்கு எதிர்மாறான நிகழ்வுகளே இடம்பெறுவதும் குறிப்பிடத் தக்கது.



<u>சிறந்த நாவல்</u>

*1989ஆம் ஆண்டுக்கான சிறந்த சிங்கள நாவல் இலக்கியத்துக்கான பரிசை பியதாசரண் பத்திவிகே பெற்றுள்ளார். இவருக்கு சிறந்த சிங்கள நாவல் இலக்கிய சுவடிக்காக கிடைக்கப்பெற்ற டி.ஆர்.விஜேவர்த்தனா விருதான 30,000ரூபா வழங்கப்பட்டது.*

- ரூபினி -

அத்தோடு கிழக்கு மாகாணத்தில் இதுவரை தமிழ்- முஸ்லீம் ஏழை விவசாயிகள் இத்தகைய காணிப் பறிப்பு, மற்றும் குடியேற்றத்துக்கு எதிராக ஒன்றுபட்டு குரலெழுப்பியதோடு ஒன்றுபட்டு எதிர்த்துப் போராடியும் வந்தனர். ஆனால் அண்மையில் தமிழ்ப் பேரினவாதத்தால் முஸ்லீம் மக்கள் மீதான தாக்குதல்களும் கொலைகளும், தமிழ்-முஸ்லீம் மக்களுக்கு இடையேயான ஒற்றுமையைக் குலைத்துள்ளதால், சிங்கள அரசால் அவசர அவசரமாக மேற்கொண்டுவரும் இத்தகைய சிங்களக் குடியேற்றத் திட்டங்களை ஒன்றுபட்டு எதிர்க்க முடியாதவாறு பலவீனப்படுத்தப் பட்டுள்ளது.

காணிப்பறிப்பு, சிங்களக் குடியேற்றம் வடக்கு- கிழக்கு மக்களை மட்டும் அச்சுறுத்தவில்லை. இது இன்று பெரியளவில் மலையக மக்களையும் அச்சுறுத்தி வருகிறது. இவற்றையெல்லாம் தமிழ், முஸ்லீம், மலையக, சிங்கள மக்களிடையேயும் சர்வதேச அரங்கிலும் அம்பலப்படுத்துவதோடு இதற்கு எதிராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல் எழுப்புவது எங்கள் ஒவ்வொருவருடையதும் இன்றைய கடமையாகிறது. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையமுடியும் எனும் பழமொழிக்கு இணங்க தமிழ்- முஸ்லீம்- மலையக மக்களின் பிரதேசங்கள் பறிக்கப்படுவதை எவராலும் அனுமதிக்க முடியாததாகும்.


தமிழ்- முஸ்லீம்களது பாரம்பரியப் பிரதேசங்கள் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட குடியேற்றங்களால் பாதிக்கப்படுவதற்கு எதிராகக் குரல் கொடுப்பதென தமிழ்- முஸ்லீம் அரசியற் கட்சிகளிடையே நவம்பர்மாத நடுப்பகுதியில் உடன்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இனவிகிதாசாரத்துக்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்களை நீக்கி, இனவிகிதாசாரத்துக்கு ஏற்ப குடியேற்றத் திட்டங்களை மேற்கொள்ளுமாறு அரசைக் கோருவதென இவர்கள் முடிவெடுத்துள்ளனர். இம் முடிவு அத்துமீறிய சிங்களக் குடியேற்றத் திட்டங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் முதற்படியான நடவடிக்கை என்று கருதலாம்.

---

நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் தேசியக்குழு
உறுப்பினரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சித்
தயாரிப்பாளருமான குகமூர்த்தி இலங்கை அரசின் படையினரால்
கொழும்பில் வைத்து கடத்திச் செல்லப் பட்டார் என
நம்பப்படுகிறது. இவர் கடத்திச் செல்லப்பட்ட பின்னர் இவரை
விடுவிக்குமாறு பல பொதுநல நிறுவனங்கள் கோரிக்கை
விடுத்திருந்தன. எனினும் இன்றுவரை இவர் கைதானது
பற்றியோ இவர் இருக்குமிடம் பற்றியோ இலங்கை அரசு எதுவும்
பேசாமல் மௌனம் சாதித்து வருகிறது. இந்தப் போக்கானது
மனித உரிமைகள் பற்றி இலங்கை அரசு காட்டும் உதாசீனப்
போக்கிற்கு மிகச் சிறந்த உதாரணமாகும். குகமூர்த்தியின் கைது
மனித உரிமைக்காகப் போராடும் இலங்கையர் அனைவருக்கும்
அரசு விடுத்திருக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தலாகவே
கொள்ளப்படவேண்டியது. இந்த அச்சுறுத்தலை மீறி மனித
உரிமைகளை மீண்டும் இலங்கையில் உறுதிப்படுத்த முயலும்
அனைவரையும் பாதுகாக்கவும், இலங்கை அரசு மேலும்
இவ்வாறான நடவடிக்கைகளில் இறங்காதிருக்கவும் வெளிநாட்டில்
வாழும் நாம் மிகப் பெரிய கடமையை ஆற்றவேண்டியுள்ளது.
இலங்கை அரசின் முகத்திரையைக் கிழித்து அதன் உண்மை
முகத்தை அம்பலப் படுத்துவது எமது கடமையே. அரசால்
கோழைத் தனமாகக் கடத்திச் செல்லப்பட்ட குகமூர்த்தியை
விடுவிக்குமாறு சர்வதேச ரீதியில் எழுப்பப்படும் குரல்களுடன்
சுவடுகள் இணைந்துகொள்கிறது. அவரது விடுதலையை
உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் இயலுமானவரை ஈடுபடுமாறு
சுவடுகள் தனது வாசகர்கள் அனைவரையும் வேண்டுகிறது.



# ஸ்பானியாவுக்கு 'நோபல் பரிசு'


Camilo José Cela.

1990ஆம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல்பரிசின் கடைக்கண்பார்வை ஸ்பானிய இலக்கியத்தின் பக்கம் விழுந்துள்ளது. உலக இலக்கியத்துக்கு ஸ்பானிய இலக்கியத்தின் பங்கு கணிசமானது.

இம்முறை இலக்கியத்துக்கான நோபல்பரிசு 74வயதான செல்லா என்பவருக்கு வழங்கப் பட்டுள்ளது. செல்லா 1916ஆம் ஆண்டு கலிசியா என்னும் சிறிய கிராமத்தில் பிறந்தார். இவரது தகப்பனார் ஸ்பானிய நாட்டு சுங்கஅதிகாரி. தாயார் பிரித்தானியாவைச் சேர்ந்தவர். செல்லா சிறுவயதுமுதல் மாட்ரீட் இலுள்ள கத்தோலிக்க விடுதியில் வளர்ந்தார். இளைஞரான செல்லா அப்போது உள்நாட்டுப் போரின்போது சுயமாக பிரான்ஸ்கோவை ஆதரித்தர். 1940ஆம் ஆண்டுகளில் செல்லாவின் 'La familia de pesual duarte' வெளியானபோது இது ஸ்பானிய இலக்கியத்திலும் ஸ்பானிய மொழியிலும் ஒரு புதிய புரட்சியை புகுத்தியது.

செல்லாவின் வாழ்வு பலசுவையான சம்பவங்களைக் கொண்டது. ஒருமுறை (1956ஆம் ஆண்டு) வெனிசுவேலா நாட்டு சர்வாதிகாரி செல்லாவுக்கு, வெனிசுவேலா நாட்டைப்பற்றி சுவைபட ஒரு புத்தகம் எழுதித் தரும்படியும் அதற்கு சன்மானமாக மூன்று மில்லியன் வெனிசுவேலா நாணயம் தரப்படும் எனவும் வேண்டுகோள் விடுத்தார். இவரும் அதற்கு சம்மதித்து அப்போதைய வெனிசுவேலா நாட்டைப்பற்றி சுவைபட ஒரு புத்தகத்தை எழுதிமுடித்தார். புத்தகம் வெளியானதும் புதிதாக பல பிரச்சனைகள் எழுந்தன. புத்தகம் வெனிசுவேலா ஆளும் சர்வாதிகாரிகளுக்கு எதிரானதாகவும் மக்கள் சார்பாகவும் இருந்ததை ஆளும் சர்வாதிகாரியினர் கண்டுகொண்டனர்.

செல்லாவிற்கு கலிசியா கிராமத்தில் இளம்பராயத்தில் கிடைத்த விவசாய வாழ்நிலை அனுபவங்களும் மக்களுக்கு இடையேயான உறவுநிலை அனுபவங்களும் பிற்கால இலக்கியத்தின் பரிமாணங்களுக்கு பெரியளவில் உதவியது. இவர் ஸ்பானிய இலக்கியத்தின் பாரம்பரிய விபரிக்கும் முறையை முதன்முறையாக மாற்றியமைத்தார். அத்தோடு ஸ்பானிய மொழியின் சில கடினப் போக்குகளுக்குப் பதிலாக தனது ஆன்மீக அழகுப் போக்கைப் புகுத்தினார். இவர் தனது பல பயண அனுபவங்களையும் தொடராக எழுதியுள்ளார்.

தற்போது செல்லாவிற்கு 74 வயதாகிவிட்டது, ஆனாலும் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தும் தனது எழுதும் பணியை நிறுத்திவிடவில்லை. இவரது பெரும்பாலான நண்பர்கள் இவரது வயதின் அரைப்பங்கு வயதுடையோரே.

தற்போது செல்லா கிழமைதோறும் ஸ்பானிய நாட்டின் மிகப்பெரிய பத்திரிகையில் எழுதிவருகின்றார். இவரது புத்தகங்கள் பலமொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. செல்லா தந்த நல்ல இலக்கியங்களை தமிழிலும் சுவைக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமா?

- மொழியவன் -

# ஈழத்து ---

சுப்பிரமணியம் குழுவினர் எனப் பெயர்போட்டு தவிலுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

- அனந்தன் -

'தமிழிசை வளராமைக்கு காரணம் தமிழ்நாட்டு இசைக் கலைஞர்களே...'

இவ்வாறு தமிழ்நாட்டு தவில் வித்வான் வலையப்பட்டி சுப்பிரமணியம் அண்மையில் 'ஆனந்த விகட'னுக்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இப்பேட்டியில் அவர், "பாட்டுக் கேக்கறவங்களுக்கு முதல்ல தமிழ்ப்பற்று வேணும்... தமிழ்ப்பற்று இல்லாம தமிழிசை வளர்ந்துடாது. நம்ம ஊர்க்காரங்க பேச்சில பாதிக்குமேல ஆங்கிலந்தானே விளையாடுது? யாழ்ப்பாணத் தமிழங்களை எடுத்துக்குங்க... அவங்க பேச்சிலேயே ஒரு ராகம் இருக்கும். இசைத் தமிழில்தான் அவங்கள் பேசுவாங்க. அவங்களுக்கு மொழிமேல அவ்வளவு ஆசை. தூய்மையான தமிழை அங்கதான் கேக்க முடியுது. அங்கே தமிழிசை வளருது" எனத் தெரிவித்துள்ளார். கேட்பதற்கு பெருமையாகத்தான் உள்ளது. தவில் வாசிக்க இவருக்கு பிடித்த இடங்களில் முக்கியமானது யாழ்ப்பாணமாம். நாதஸ்வரம் வாசிப்பவரது பெயர்போட்டு அவரது குழுவினர் என்று குறிப்பிடுவது தமிழ்நாட்டு வழக்கமாம். ஆனால் யாழ்ப்பாணத்தில் வலையப்பட்டி

*ஈழத்து இசைப்பாடகி இலங்கையைவிட்டு இந்தியாவுக்கு 1984இல் அகதியாக சென்றவர்களில் புகழ்பெற்ற கர்நாடக இசைப்பாடகியான தர்மினி தில்லைநாதனும் ஒருவர்.

கத்தோலிக்க கிறிஸ்தவரான இவர், மேற்கத்தைய இசைப்பாணியில் பாடப்பட்டுவந்த கிறிஸ்தவப் பாடல்களை கர்நாடக இசைப்பாணியில் பாடி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியவர். இலங்கை நுண்கலைப் பீடத்தில் கல்வி கற்று டிப்ளோமா பட்டம் பெற்றவர்.

இலங்கை வானொலியில் தினமும் அதிகாலையில் ஒலிபரப்பாகும் கிறிஸ்தவப் பாடல்கள் இவரும் சீலன் என்பரும் சேர்ந்து புதுமையான இராகத்தில் பாடியவைதான்.

இசையினால் கவரப்பட்ட தில்லைநாதனைக் காதலித்து திருமணம் செய்துகொண்ட இவருக்கு ஒருமுறையாவது தஞ்சை திருவையாறு ஆராதனையில் பாடவேண்டும் என்பது இலட்சியமாம்.

- அனந்தன் -

- நன்றி: ஆனந்த விகடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்முறையும் மனித உரிமைகளும்
## கந்தசாமி நினைவுப் பேருரை

நியாயவாதியும், நிவாரண புனருத்தாரண தொண்டரும் மனித உரிமை ஆதரவாளருமான க.கந்தசாமி அவர்கள் 19யூன் 1988 அன்று யாழ்ப்பாணத்தில் கடத்திச் செல்லப்பட்டதையடுத்துக் கொல்லப்பட்டார் எனக் கருதப்படுகிறது.

'வன்முறையும் மனித உரிமைகளும்' என்ற தலைப்பிலான இந்தப் பேருரை ரெஜி சிறிவர்த்தனா அவர்களால் கடத்தலின் முதலாண்டு நிறைவையும், 'அகால மரணம் - கந்தசாமியின் நினைவு மலர்' என்ற நூல் வெளியீட்டையும் குறிக்குமுகமாக கொழும்பில் 1989 யூன்19ல் ஆற்றப்பட்டது.

கந்தசாமி ஞாபகார்த்த மலர் வெளியீட்டுக் குழு அதன் நினைவு மலர் இறுதியில் 'படைவீரன் வரவு பார்த்திருத்தல்' என்ற எனது பாடலைச் சேர்த்திருப்பதை நான் முதலில் குறிப்பிட வேண்டும். அதனை மலரில் வெளியிட்டுக் கொள்ள விரும்பியதற்குக் காரணம், கந்தசாமியின் பரிதாப முடிவுக்கு சில நாள் முன்னர் அவருக்கு அப்பாடலை யாரோ ஒரு நண்பர் அனுப்பியிருந்தமையாகத் தெரிகிறது. 1987இன் இறுதியில் இந்திய - இலங்கை உடன்படிக்கையால் தூண்டப்பட்ட சமாதான நம்பிக்கைச் சுடர், வன்செயல் மீண்டும் நாட்டில் தலையெடுக்கத் தொடங்கியதன் விளைவாக, மங்கத் தொடங்கிய சமயத்தில் இப்பாடல் புனையப்பட்டது. பாடலின் தொனிப் பொருள் யாதெனில், பொதுமக்கள் உலகத்தை எவ்வாறாயினும் முன்னேறச் செய்யவியலாத நிலையில் ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கை வெளியுலகிலுள்ள அமைதியின்மையாலும் வன்செயல்களாலும் எந்தக் கணமும் ஒழிக்கப்படலாம் என்ற உணர்வு மீதூரும் நிலையில் அறிவியல் நாட்ட உலகினுள் அடைக்கலம் புகுவதே எவரும் செய்யத்தக்கது என்பதாகும். அப்பாடலின் பொருளை இப்போது நான் குறிப்பிடுவதற்குக் காரணம் யாதெனில் நாம் இன்று வாழ்கின்ற இருள்மயமான உலகில் கந்தசாமியின் வாழ்க்கை முற்றிலும் மாறுபட்ட ஒரு நோக்கத்திற்குச் சான்றாக அமைந்தமையேயாகும். கந்தசாமி அவர்கள் தமது வாழ்க்கைத் தொழிலாகத் தேர்ந்தெடுத்த துறையில் அவர்பால் இயல்பாகவே துலங்கிய வியத்தகு ஆற்றலையும் அபரிமித உழைப்புச் சக்தியையும் பயன்கூர விருத்தி செய்து இதன்மூலம் கிட்டும் அனுபவத்திலும் திருப்தியிலும் களிப்புற்று வாழ்ந்திருக்கலாம். அதற்குப் பதிலாக, அநீதியை எதிர்த்துப் போராடவும் அநீதிக்குப் பலியானோர்க்கு உதவவுமென்றே தனது வாழ்வை அர்ப்பணம் செய்தார். மானிடத்துக்கும் நியாயத்துக்கும் இழைக்கும் கொடுமையைச் சாடத் தனது முழு சக்தியையும் பயன்படுத்தினார். இத்தகைய

பரித்தியாகத்தால் தம் வாழ்வையே பலியிட்டார். ஆக்கிமெடீஸின் மரணத்துக்கும் கந்தசாமியின் மறைவுக்கும் உள்ள பொதுவான அம்சம் நாகரிகம் வாய்ந்த நற்பண்புகள் மீது விலங்கியல் பலாத்காரம் வெற்றி கொண்ட கொடூரம்தான். ஆதலால் ‘படைவீரன் வரவு பார்த்திருத்தல்’ என்னும் பாடல் கந்தசாமிக்கு ஏற்புடைய காஞ்சிச் செய்யுளாகாது. அதற்குப் பதிலாக அவரது வாழ்வும் மரணமும் பற்றிய எனது உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்து விளங்கும் ஆங்கிலக் கவிஞர் டபிள்யூ.எச்.ஒடனின் பின்வரும் பாடலடிகளை அவர்க்கமைந்த போற்றரவாகப் புகழ்வேன். வெளிக்கொள்ளாமலும் அடக்கமாகவும் மனித வர்க்க ஈடேற்றத்துக்கு அளப்பரியன செய்து புகழாரத்தையும் போற்றலையும் எதிர்கொள்ளாது ஒதுக்கமாக நின்ற இவ்வுத்தமரை நினைத்துப் பார்க்கையில் ஒடனின் ஆடம்பரமற்ற அடிகளே ஏற்புடைத்தாகப் படுகின்றன.

கணந்தோறும் இறப்போர் கணக்கிலராய்எம்
கண்ணீர் அருவி கரைகடந்தோட
சமூகப் பொதுமையாய்ச் சாத்துயர் விளங்கும்
அவல நிலையில் யாரை புகழ்வது யாரை விடுவது
மக்கள் உயர்வுறு வகையிற் செய்பணி
எல்லையின் றாயினும் எம்மா வியன்றதை
இயற்றுவம் யாமென அரும்பணி புரிந்தவாறு
மாய்ந்து மகான்களும் மறைகின்றனரால்

இச்சொற்பொழிவை ஆற்றும்படி கந்தசாமி ஞாபகார்த்தக் குழுவினர் என்னை அழைத்தபோது ‘வன்முறையும் மனித உரிமைகளும்’ என்னும் தலைப்பில் பேசுவதெனத் தீர்மானித்தேன். தனது சகாக்களான மனித வர்க்கத்தினரின் உரிமைகளைப் பேணுதலை நோக்கமாகக் கொண்டு வாழ்ந்து, அத்தகைய பணியில் ஈடுபட்டிருந்தகாலை வன்முறையால் இறக்க நேர்ந்த ஒரு சான்றோனை நினைவு கூர்வதற்குரிய பொருத்தம் நோக்கியே இத்தலைப்பைத் தேர்ந்தெடுத்தேன். அது மாத்திரமன்றி, அடிப்படை உரிமைகளுள் அதிமுக்கிய உரிமையான வாழ்வு, உரிமை நாள்தோறும் மீறப்பட்டு வரும் இவ்வேளையில் இதனைவிட முக்கியத்துவம் வாய்ந்த விடயம் இருக்க முடியாது என்பதாலும் இத்தலைப்பைத் தேர்ந்தெடுத்தேன். இவ்வுரையின் வடிவப் பாங்கு, நாம் இன்று எதிர்கொள்ளும் சூழ்நிலையின் தன்மையால் நிர்ணயிக்கப் பட்டுள்ளதெனலாம். இன்று மனித உரிமைகள் அரசினால், சனநாயகத்தின் பேரில், அல்லது நாட்டின் இறைமையினையும் பாதுகாப்பையும் பேணுதல் என்ற தோரணையில் மீறப்படுகின்றன. மறுதரப்பில், தீவிரவாத குழுக்களினால் தேசிய அல்லது சமூக விடுதலையின் பேரில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. இங்கே ஒருபுடைச் செயற்பாடுகளை மட்டும் எடுத்துக் கூறி மறுபுடைச் சார்ந்தவற்றைக் கூறாது விடுவது ஏமாற்றத்தை விளைவிப்பது மாத்திரமன்றி நேர்மையீனமானதுமாகும். ஆதலின் எனது உரை இரு பாகங்களை உடையதாய் விளங்கும். முதலில் அரச வன்முறையையும் பின்னர் இயக்க வன்முறைகளையும் எடுத்துக்கூற முயல்வேன். இந்த இரு வகையான வன்முறைகள் பற்றிப் பேசுவதற்கு முன், சில தொடக்க நிலைக் குறிப்புகளை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

இலங்கையில் இன்று காணப்படும் வன்முறைச் செயற்பாட்டுத் தன்மையினை நோக்கிற் கொண்டு இதற்குப் பெரும்பாலும் ஏதுவாயமைந்த சமூகக் காரணிகளை ஆராய்வதற்கும் அதிகாரம் வளங்கள் என்பவற்றின் பங்கீட்டின் பொருட்டும் பல்வேறு இன, வர்க்கக் குழுக்கள் நடத்திய போராட்டத்தை ஆய்வு செய்தற்கும் இயலும். ஆனால் வன்முறை பற்றிய எனது நோக்கு இந்த வகையில் அமைவதன்று. எமது சமூகத்தில் பிளவும் பகையுணர்வும் நிலவுவதற்குரிய சமூக ஏதுக்கள் யதார்த்தமானவையே. ஆனால் இச் சூழ்நிலைகளும் அவற்றால் எழும் பிரச்சனைகளும் வன்முறைகளாக உருப்பெற்றும் பரந்தும் தொடர்ந்தும் நிலவும் போக்கானது விலக்க முடியாததொன்றல்ல. பிணக்கு அல்லது முரண்பாடு வன்முறையாகப் பரிணமிக்கும். இப்போக்கு அரச நிருவாகப் பொறியைக் கையாளும் தலைவரும், அந்நிருவாகத்துடன் முண்டிக் கொண்டு நிற்கும் அரச விரோத சக்தியினருமாகிய இரு சாராரும் மேற்கொள்ளும் முடிவுகளைப் பொறுத்தமைவது; நாட்டின் பாதுகாப்பைப் பேணுதற்கியன்ற நெறிமுறை யாது என்பதை நிர்ணயிக்கும் அரச சக்தி, அரச விரோத சக்தி ஆகிய இரண்டினுள் ஒன்று மேற்கொள்ளும் முடிவுகள் பெரும்பாலும் மற்றதன் எதிர்ப்புச் செயற்பாட்டினைத் தூண்டுவனவாக அமைவதுண்டு. சமீப காலத்தில் நமது நாட்டில் இடம்பெற்ற அரச வன்முறைகளும் அரச விரோத வன்முறைகளும் இதற்குச் சான்று பகர்வன. நமது சமூகத்தில் வன்செயல்களைப் பெருக்கவல்ல அல்லது குறைக்க வல்லதான உணர்வுபூர்வ முடிவுகளை அரசியல் நாடக சூத்திரதாரிகள் மேற்கொள்ளுதற்கு இடமாயமைந்த இத்துறை பற்றியே எனது உரை துலக்க முயலும்.

உணர்வுபூர்வ முடிவுகள் என்று நான் குறிப்பிடுகையில், முடிவு மேற்கொள்பவர் அரச தலைவராயினும் சரி அல்லது தீவிரவாத இயக்கத் தலைவராயினும் சரி தாம் எடுக்கும் முடிவால் ஏற்படத்தக்க விளைவுகளை அறிந்து செய்கின்றார் என்பது எனது கருத்தன்று; அவரின் முடிவுகள் வேளைக்கேற்ற உடனடித் தேவை நோக்கிலேயே மேற்கொள்ளப் படுகின்றன என்பதே எனது கருத்தாகும். ஆனால் அத்தகைய முடிவுகளால் காலாந்தரத்தில் ஏற்படவல்ல விளைவுகளைக் கருத்திற் கொண்டு நோக்குவது வெகு அவசியமாகும்.

11/11

கார்த்திகை வஸந்தத்தின் காகிதச் செம்மலர்கள்.
விதைக்கூடில்லாத ப்ளாஸ்றிக் கருவட்டம்
மகரந்தஞ் சிந்தாது.
பசுமையாய் நீளும் வாடாத காம்பு
உயிரற்றுப்
பொத்தான் குழிகளுட் புதையக்
காசுதின்னி உண்டியல்
ஏப்பம் ஒலிக்கும்.
பயண அலுப்பிற்
கற்றூண்மேற்சாயும் பொப்பி வளையங்கள்
வரிசையாய். வரிசையாய்
உலகெல்லாம் ஆண்ட
பரம்பரையின் வாரிசுகள்
தலைதாழ்த்தும் நிமிஷமோ
மௌனமாய் நகரும்.
ஆண்ட பரம்பரைக்காய்
ஆயுதங்கள் ஏந்தி
மாண்ட படையினரை மனதில் நினைவோமா,
மூளவுள்ள போர்களிலே
ஆயுதமே ஏந்தாமல்
மாள இருக்கின்ற மானிடரை நினைவோமா?

– சிவா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணத்துக்கு 1956இல் அரச கரும மொழிச் சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நாளை எடுத்து நோக்குவோம். சிங்களம் மட்டும் என்ற கொள்கை கைக்கொள்ளப் பட்டமையே இலங்கை வரலாற்றுப் போக்கினை மாற்றியமைத்த பாரிய தாக்கமிக்க முடிவுகளுள் ஒன்றாகும். இவ்விடயத்தில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா, தென்னிந்தியாவில் இந்தித் திணிப்பைத் தவிர்ப்பதில் தாராளமான போக்கையும் துணிவையும் கடைப்பிடித்த ஜவஹர்லால் நேரு போன்று மனோதிடமும் கொள்கைத் திட்பமும் கொண்டிருந்ததாலோ என்று நம்மவரிட் சிலர் இன்று அங்கலாய்க்கலாம். 1956இல் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் இந்த அம்சம் பற்றி யான் இப்போது ஆராய முற்படவில்லை. ஆனால் வன்முறை விடயம் தொடர்பில் நெருங்கிய சம்பந்தம் உடைய ஓர் அம்சம் பற்றியே பேச முற்படுகிறேன். பாராளுமன்றத்தில் மசோதா கொண்டுவரப்பட்ட அதே நாள் பிற்பகல் மசோதாவை எதிர்ப்பவரான சில தமிழர்கள் காலிமுகத் திடலில் மௌனமாக, அமைதியான சத்தியாக்கிரகம் ஒன்றை நடத்தினர். அவ்வாறு நடத்திய வேளை அங்கு ஏவிவிடப்பட்ட குண்டர்களால் தமிழ்ப் பிரமுகர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். நாட்டின் அரசுத் தலைவர் இது நடைபெற அனுமதித்தது மாத்திரமன்றி, அமைதியை நிலைநாட்ட அவ்விடம் வந்து சேர்ந்த பொலிசாரை நடவடிக்கை எதுவும் எடுக்காமல் மீண்டு செல்லுமாறு பணித்தனர். இவ்வாறு அரசாங்கமானது தமிழ் அரசியற் குழுக்களின் அமைதியான எதிர்ப்பை வன்முறை கொண்டு தடுக்க முற்பட்ட செயலானது ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் தொடர்ந்து இடம்பெறலாயின. இத்தகைய வன்முறைச் செயற்பாடுகளின் தாக்க விளைவுகள் எழுபது எண்பதுகளில் போர் முனைப்புக் கொண்ட இளந் தலைமுறை ஒன்று வன்முறை வழியில் உரிமைப் போராட்டத்தை நடத்தும் நோக்கம் கொண்டு உருப்பெற்றமையில் புலப்படலாயின.


**மனிதம்**

சுவிசிலிருந்து வெளியாகும் இருமாத இதழ். வருட சந்தா 20SFR. தொடர்புகள்:- MANITHAM, Post Fach 12, 3000 Bern 11, Switzerland.


இந்தச் சம்பவங்களை இனத்துறையிலன்றி சமூக பொருளாதாரத் துறையில் இடம்பெற்ற சில சம்பவங்களோடு ஒப்பிட்டு நோக்குவது பயனுடைத்தாகும். 1978இலும், 1989இலும் வேலை நிறுத்தம் செய்தும் வேலைக்குச் செல்வோரைத் தடுத்து நிறுத்தியும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட பணியாளர்களும் ஆர்ப்பாட்டம் செய்த பல்கலைக் கழக மாணவர்களும் காடையர்களால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனர். அமைதியான முறையில் வேலை நிறுத்தம் செய்யவும் ஆர்ப்பாட்டம் செய்யவும் அமைந்த உரிமைகள் அதுவரை காலமும் வழமையான சனநாயக ரீதியான உரிமைகளாகவே கருதப்பட்டு வந்தன. இப்போது வன்முறை கொண்டு அவற்றைத் தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தன்மையில் சிறுபான்மைச் சத்தியாக்கிரகிகள், தொழிலாளர்கள், மாணவர்கள் என்றின்னோரை அதிகாரத்தில் உள்ளோர் இவ்வாறு நடத்த



முனைந்ததன் அந்தரங்க எண்ணம்தான் யாது? 'இவர்கள் ஒருபோதும் மறவாத விதமாக ஒரு பாடம் புகட்டி விடுவோம்' என்று உள்ளூரச் சிந்தித்தார்கள் போலும். ஆனால் அதிகாரத்தில் உள்ளோர் புகட்டக் கருதிய பாடம் ஒன்று. அவர்கள் கற்றுக் கொண்ட போதனை வேறாயிற்று. தமிழ் அரசியல் இயக்கம், மாணவர் இயக்கம் என்பவற்றிற்குத் தலைமை தாங்கினோர், அரசியல் யாப்புக்கும் சனநாயகச் சட்டகத்துக்கும் உட்பட்டு இயங்கிய அமைப்புகளில் இருந்து வளர்ந்தவர்களே. இவர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்ட வன்முறைகள், சனநாயக முறையில் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையைத் தகர்ப்பதாயமைந்தன. அமைதியான சனநாயக ரீதியான எதிர்ப்புகளை நசுக்கியொழிக்க முயன்றதன்

---

ஒரு மாலை நேரத்தில்
அவரை எரித்தோம்!

அந்தக் கதிரவன் வந்து
அரசடியில் நின்று பார்த்து
அவலம் மேலிட வானில்
வெய்யில் குடை பிடித்தான்

கந்தன் வடித்திருந்த
கள்ளு முட்டி
காகம் கொத்தி உடைந்து
வெள்ளைக் கண்ணீர் விட்டது

சொந்த மெல்லாம் வந்து நின்று
சொட்டு கண்ணீர் விட்டு
"சொத்தில் பங்கிருக்கா?"- என்று
கேட்டுச் சென்றன.
"அந்திரட்டிக்கு வாறன்" என்று சொல்லி
அவசரமாம் அண்ணரிற்கு
அடுத்த நாளே போய் விட்டார்.

சிந்திய வியர்வையை- தன்
சீலைத் தலைப்பால் ஒற்றி
"சீ! சீ! என்ன புழுக்கம்"
என்று சின்னக்காவும்
தொந்தியைப் பெருத்து நின்ற- தன்
டொரோன்டோ கணவரிடம்,
"கந்தர்மடம் சரியான வெய்யிலப்பா"
என்று சொன்னா!

சிந்தனையில் சிக்கலுடன்
சுவரில் தலைசாய்க்க- எதிரில்
மந்திரப் புன்னகையில் அம்மா
மாலையுடன் "ப்ரேம்" போட்டுத்
தூக்கினார்...

அட! நான் அநாதை...!

வந்தவர்கள் போய்விட்டார்
வரமாட்டார் மீண்டும்,
எந்தன் வழித்துணைக்கு எவருமில்லை;
யந்திரம் தான் வாழ்க்கை இனி

கந்தன் வடித்திருந்த
கள்ளுமுட்டி
காகம் கொத்தி- நிறைய
வெள்ளைக் கண்ணீர் விட்டது
கதிரவன் கூட அப்பா,
எந்தன் கனவிற்குப் பயந்து
கடலுக்குள் ஒளிந்து கொண்டான்.

"அப்பா"
ஒரு மாலை நேரத்தில்
அவரை எரித்தோம்!

## 'அப்பா'

- ஜனனி -

நன்றி: வீரகேசரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விளைவாக வன்முறையை கையாளத் தயாராக உள்ள அரசாங்கத்துக்கு எதிராகப் பயன்படத்தக்க ஒரே ஆயுதம் எதிர் வன்முறைச் செயலே என்ற நம்பிக்கை சிறுபான்மை, தொழிலாள, மாணவ கூட்டத்தின் புதிய தலைமுறையினரிடையே தோன்றி வளரலாயிற்று. 1982இல் நடைபெற்ற மக்கள் தீர்ப்பெடுப்பு அதோடியன்ற அரசாங்கத் தரப்பில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை, சனநாயக நெறிமுறையின் பிரதான அங்கமாகிய தேர்தல் முறையின்பாலும் இத்தகைய கருத்துப் பாங்கினையே கொள்ளும்படி செய்தது. இவ்வாறு வடக்கிலும் தெற்கிலும் அரச வன்முழை கடுந் தீவிரவாதப் போக்கை மேலும் வளர்த்ததோடு தமது பிணக்கைப் பயன்படுத்தும் உத்திகளாக ஏகே47, ரீ56 ஆகிய ஆயுதங்களை கொண்டவர்களை வலுப்படுத்தவும் வழி சமைத்தது.

ஆயுதம் தரித்த கிளர்ச்சியை எதிர்கொள்ள வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்ட போது கட்டவிழ்த்து விடப்பட்ட கரையற்ற வன்முறையை நியாயப் படுத்தற்கு பிறிதொரு தர்க்கிக ஞாயம் மேற்கொள்ளப் பட்டது. நாட்டின் நிலைபேறு அச்சுறுத்தலுக்கு உள்ளாகிய நிலையில் நாசம் செய்ய முயல்வோர்க்கு எதிராக எத்தகைய நடவடிக்கையும் செயற்பாடும் அனுமதிக்கப் படலாம். "போர் நிகழ்கையில் நெறிமுறையேது" எற்ற வார்த்தைகள் மக்களது வாழ்வும் மரணமும் உள்ள சகல நிகழ்வுகள் மீதும் யதேச்சாதிகாரம் செலுத்துவோர் வாயில் வாழ்வதை அவதானித்திருக்கலாம். இந்த அடிப்படையில் சித்திரவதை, கொலை, போராளிகள் அல்லாதோர்க்கு எதிரான பயங்கரச் செயல்கள் என்றின்ன யாவும் அரசு தனது உய்வினைப் பேணுதற்கு, அவசியமானவை என நியாயப் படுத்தப்படுவது சகஜமாயிற்று.

ஆட்சி நடத்தும் அதிகார பீடத்தினரது தருக்க நெறிக்கும் போராளிக் குழுக்களது தருக்க நெறிக்கும் இடையே பயங்கரமான ஒற்றுமை காணப்படுகிறது. இரு சாராரும் குறிக்கோளை எய்துதற்கு எந்த வழியையும் பின்பற்றலாம் என்ற கோட்பாட்டில் நம்பிக்கை உள்ளவர்கள். சனநாயகத்தைப் பேணுவதும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதும், தேசிய ஒருமைப்பாட்டை கட்டிக் காப்பதுமே குறிக்கோளாக உள்ளவர்கள் அரச தரப்பினர். தேசிய விடுதலை அல்லது சமூக விடுதலையே குறிக்கோளாக உடையவர் மறுதரப்பினர். இரு தரப்பினர் பார்வையிலும் தாம் போற்றும் குறிக்கோளை எய்தும் நெறியில் தனிப்பட்ட வாழ்க்கையின் பெறுமானம் அற்பமே. இந்நியாயத் தொடையை ஏற்க முடியாமைக்குக் காரணம் வெறும் காருணிய உணர்வு நோக்கு மாத்திரமன்று. இந்நோக்கினைச் சிலர் அறநெறி உணர்ச்சி நுணுக்க சிந்தனை என ஒதுக்கிவிடலாம். இஃது ஏற்கப்படாமைக்குரிய உண்மைக் காரணம் கையாளப்படும் மார்க்கம் குறிக்கோளை நிர்ணயிக்கும் நிலையுடையதாகிறது என்பதேயாகும். கடந்த நூற்றாண்டில் ஜேர்மனிய சோஷலிச கவிஞனான லசாலி கூறியது இங்கு பொருத்தமுடையது.

மார்க்கத்தை வகுக்காமல் நோக்கத்தை
காட்டாதீர்
நோக்கமொடு மார்க்கங்கள்
பிணைந்துறுதல் இயல்பதனால்
ஒன்றினை நீர்மாற்றுவதால்
மற்றதையும் மாற்றிடுவீர்
வெவ்வேறு மார்க்கத்தால் வேறுபட்ட
பயன்விளையும்

(அடுத்த இதழில் முடியும்)



இன்றைய

# இந்தியா



ஆதித்தன்

'ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு' என்பது போல இதுவரை தேடிவந்த கசல பதவிகளையும் நிராகரித்துவிட்டு பிரதமர் பதவியை மட்டுமே கருத்திற் கொண்டு ஈற்றில் அரசியல் நாகரிகம், வெட்கம், அவமானம், கூச்சம் என்ற பல விடயங்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு பதவி கிடைத்தால் போதும் என்ற நிலையில் பல அரசியல் குத்துக்கரணங்களை அடித்து இறுதியில் சுதந்திர இந்தியாவின் ஒன்பதாவது பிரதமராக தெரிவாகியுள்ள சந்திரசேகர் ஸ்தாபன காங்கிரஸின் உறுப்பினராக இருந்தவர். துருக்கிய இளஞ்சிங்கம் என நண்பர்களால் அன்புடன் அழைக்கப்படும் இவர் 1965ல் உள் முரண்பாடுகள் காரணமாக கட்சி இந்திரா காந்தியால் இரண்டாக்கப் பட்டதைத் தொடர்ந்து காமராஜருடன் இணைந்து இந்திராவை ஆதரித்தார். இக்கட்சி (இந்திரா காங்கிரஸ்) 1971ல் ஆட்சியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து ஒரு சில வருடங்களிலேயே நாட்டில் அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டு அரசியல் எதிரிகள் பந்தாடப் பட்டனர். இதனால் மொரார்ஜி தேசாய், ராஜ்நாராயண், ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்ற கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கட்சியை விட்டு வெளியேற சந்திரசேகரும் கட்சியை விட்டு வெளியேறினார். அன்று முதல் இவர் சார்ந்திருந்த சகல கட்சிகளிலும் இவர் சர்ச்சைக்குரிய மனிதராகவே இருந்து வருகிறார்.

1989ல் நடைபெற்ற தேர்தலில் பாரதீய ஜனதா, கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைத்த வி.பி.சிங் தலைமையிலான ஜனதா தள் அரசாங்கம் ஒரு வருட காலமாக பலவித நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்து வந்தபோதும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சலுகைகள் வழங்கும் 'மண்டல் கமிஷன்' அறிக்கையும் தீவிர இந்து இனவாத கொள்கை கொண்ட பாரதீய ஜனதா கட்சியின் 'அயோத்தி நகர் நோக்கிய ரதபவனியுமே' சிறுபான்மை அரசு கவிழ முக்கிய காரணங்களாகும்.


கட்சிக்குள் நிலவிய கருத்து முரண்பாடுகளால் உதவிப் பிரதமர் பதவியில் இருந்து தேவிலால் விலக்கப்பட்டதும் பின் தேவிலால் தலைமையில் புதுடில்லியில் நிகழ்ந்த விவசாயிகள் ஊர்வலத்தைக் கண்டு நிலைதடுமாறிய வி.பி.சிங் எதுவித ஆராய்வுமின்றி திடீரென மண்டல் கமிஷன் அறிக்கையை நடைமுறைப்படுத்தி பிற்பட்ட ஹரிஜன மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற முனைந்தார். இந்நிலை மண்டல் கமிஷன் தொடர்பாக எல்லாக் கட்சிகளிலும் ஆதரவாகவும் எதிர்ப்பாகவும் கோஷ்டிகள் உருவாக வழிவகுத்ததுடன் உயர்த்தப்பட்ட வகுப்பினர் பலர் தீக்குளிப்பில் ஈடுபட்டு உயிர் துறக்கவும் காயங்களுக்குள்ளாகவும் மாத்திரமே வழிவகுத்தது. கலாசார, சமூக, அரசியல் ரீதியாக பிற்படுத்தப்பட்ட மக்கள் உயர்த்தப்பட்ட மக்களுடன் ஒப்பிடுகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்குமுறைக்காளாவது உண்மையே எனினும் மண்டல் கமிஷனின் சிபார்சுகள் அவர்களுக்கு எவ்வளவு தூரம் 'விடுதலை' அளிக்கிறது என்பது கேள்விக்குறியே.

மண்டல் கமிஷன் அறிக்கையால் பிற்படுத்தப்பட்ட மக்களிடையே வி.பி.சிங்கின் ஆதரவு கூடுவதை அவதானித்த பாரதீய ஜனதா கட்சி இந்நிலை தொடருமானால் தாம் அரசியலில் அனாதைகளாகி விடுவோம்



என்பதை நன்கு உணர்ந்து கொண்டது. இந்நிலையில் சற்று ஓய்ந்திருந்த மதவெறிக் கோஷங்கள் மீட்டும் முழுங்கின. இதன் அடிப்படையில்தான் அயோத்தியில் உள்ள முஸ்லீம்களின் மசூதியை இடித்துவிட்டு அவ்விடத்தில் முன்பிருந்ததாகக் கருதப்படும் (!) இராமர் கோயிலை மீண்டும் கட்டவேண்டும் எனவும் அதற்கு இந்தியாவில் உள்ள சகல இந்துக்களும் முன்வந்து நேரடியாக வந்து ஒத்துழைக்க வேண்டும் என்றும், இந்தியா இந்துக்களுக்கே சொந்தம் என்றும் கூறி இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஏனைய சிறுபான்மை மதங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் நீக்கப்பட வேண்டும் எனவும் கோரி மாபெரும் 'ரதயாத்திரை' ஒன்றை ஆயிரக் கணக்கான மக்களுடன் இணைந்து அயோத்தியை நோக்கி நடத்தியது பாரதீய ஜனதா. மசூதியை இடித்துவிட்டு கோயிலைக் கட்டும் பாரதீய ஜனதா கட்சியின் கோரிக்கை முஸ்லீம் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியதுடன் நாட்டில் பதட்ட நிலை உருவக வழிவகுத்தது. மசூதியை பாதுகாக்க அரசு இராணுவ துருப்புகளையும், பரா துருப்புகளையும் குவித்ததுடன் பா.ஜ.கட்சி தலைவர் அத்வானி உட்பட பலரைக் கைது செய்தது. இதனால் அதுவரை பிரதமர் வி.பி.சிங்கிற்கு வழங்கிய ஆதரவை மீளப் பெறுவதாக பாரதீய ஜனதாக் கட்சி ஜனாதிபதிக்கு அறிவித்தது. நிலைமையை துல்லியமாகக் கணக்கிட்ட சந்திரசேகர் தனது பதவி ஆசையை நிறைவேற்றிக் கொள்ள அவரால் பெரிதும் விமர்சிக்கப்பட்ட 'போபாஸ்' புகழ் 'மிஸ்டர் பரிசுத்தம்' ராஜீவ் காந்தியுடன் இணைந்து ஜனதா தன் கட்சியை உடைத்து ஜனதா(எஸ்) என்ற பெயரில் புதிய கட்சியை உருவாக்கி தற்போது தமது நீண்டநாள் ஆசையை நிறைவேற்றிக் கொண்டார்.

பல்வேறுபட்ட இன, மொழி, மத, சாதி வேறுபாடுகளைக் கொண்ட இந்தியா முன்னெப்போதும் இல்லாதளவு தற்போது இனப் பூசல்களும், மதப் பூசல்களும் நிறைந்து விளங்குகிறது. தென்னாசியாவில் அடிக்கடி 'பொலிஸ்' உத்தியோகம் பார்த்துவந்த இந்தியா இன்று தனது உள்நாட்டு பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியாமல் இருப்பதும் இதனால் நாளாந்தம் வன்முறைக்கு இலக்காகி இறக்கும் மக்களின் தொகை அதிகாரதிது வருவதும் 'இன்றைய இந்தியா'வின் சாதாரண நிகழ்ச்சிகளாகி விட்டன.

இனப்பூசல்களும் மதப்பூசல்களும் 'சுதந்திர' இந்தியாவின் வரலாற்றில் புதிய நிகழ்ச்சிகள் அல்ல என்றாலும் பாரதத்தில் இன்று நிலவும் தொடர் நிகழ்வுகள் 'எதிர்கால' இந்தயாவிற்கே இருள் நிறைந்ததாக அமைய உள்ளன என்றே தோன்றுகிறது. மகாத்மா காந்தி, டொக்டர் அம்பேத்கார், ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்ற தலைவர்கள் எதிர்கால இந்தியாவில் தோன்றினாலும் பாரதம் அவர்கட்கு மதிப்பளிக்குமா என்பது கேள்விக் குறியே. இந்து முஸ்லீம் பிரச்சனை இந்திய நலன்களுக்கும் வளர்ச்சிக்கும் என்றும் தடையாகவே இருக்கும்.

## வெப்பமான வருடம்

அமெரிக்காவில் உள்ள 'National Oceanogaphic and atmospheric' நிறுவனத்தின் ஆய்வின் படி 1990ம் ஆண்டே அதிகூடிய வெப்பத்தை கொண்டிருந்ததாகவும், இது 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட கணிப்பீட்டின் படி அறியப்படுகின்றது. வரலாற்றில் இதுபோல் அதிகூடிய வெப்பத்தை கொண்டிருக்கவில்லை எனவும் சொல்லப் படுகின்றது.

-லூபி-

# இலங்கை அரசின்

தீபன்

இலங்கை நிலைமை தொடர்பாக கனடிய வெளிவிவகார அமைச்சர் ஜோ கிளார்க் கவலை தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமைகள் மீறப்படுவதையும், அப்பாவிப் பொதுமக்கள் யுத்தத்துக்குப் பலியாக்கப் படுவதையும் அவர் கண்டித்துள்ளார்.

சமீப காலங்களில் மனித உரிமைகள் தொடர்பாக முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் சட்டத்துக்கு மதிப்பளிக்கவும் மனித உரிமைகள் மீறப்படும்போது அவற்றை மீறுவோரை நீதிக்கு முன் நிறுத்துவது பெரும் கடமை எனக் குறிப்பிட்டுள்ள கிளார்க் அமைக்கப்பட்ட அதிகார அமைப்பு என்ற வகையில் உரிமைகட்கு மதிப்பளித்து மற்றவர்கட்கு முன் மாதிரியாக இருக்க வேண்டிய கடப்பாடு இலங்கை அரசுக்கே உண்டு எனவும் கூறியுள்ளார்.

வடக்கில் யுத்தம் காரணமாக பொதுமக்கள் பெருமளவில் பாதிப்புக்கு ஆளாவதோடு அவர்கள் உணவு கிடையாமல் பெரும் துன்பங்களை எதிர்நோக்குவதையும் தமது அறிக்கையில் குறிப்பிட்ட கிளார்க் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் உணவு வழங்குவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் எனவும் இவ்வாறு பொதுமக்களின் நலனைப் பாதுகாக்க எடுக்கப்படும் முயற்சிகளை புலிகள் தடுக்காதிருக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

இலங்கையில் நிலவும் நெருக்கடியான நிலைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கலாம் என நம்பிக்கை தெரிவித்துள்ள கிளார்க் இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைக்கு முன்வந்து வடக்கு கிழக்கு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

ஒக்டோபர் 16

* வட- கிழக்கு மலையகம் என்ற பிரிவுகள் இன்றி இணைந்து செயல்பட வேண்டும் என தமிழ் காங்கிரஸ் உப தலைவர் மோதிலால் நேரு கூறியுள்ளார்.

* நெடுந்தீவு பகுதியில் மீன் பிடிக்க அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

ஒக்டோபர் 17

* யாழ் குடாநாட்டில் ராணுவ நடவடிக்கை தீவிரப் படுத்தப் பட்டுள்ளது.

* கிழக்கு ஜெருசலேமில் இஸ்ரேல் பலஸ்தீனர்களைக் கொல்வதை இலங்கை அரசு கண்டித்துள்ளது.

ஒக்டோபர் 18

* யாழ், கிளிநொச்சி மாவட்டங்கட்கு ஊரடங்கு விஸ்தரிக்கப்பட்டு தாக்குதல்கள் தொடர்கின்றன.

ஒக்டோபர் 19

* வசாவிளானை அரச படைகள் கைப்பற்றி முன்னேறுவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஒக்டோபர் 20

* படைகள் புன்னாலைக் கட்டுவன் வரை முன்னேறியுள்ளதாக அறிவிக்கப் படுகிறது.

ஒக்டோபர் 21

* தெல்லிப்பழை வைத்தியசாலை விமானக் குண்டு வீச்சுக்கு இலக்கானது.

ஒக்டோபர் 22

* காங்கேசன்துறை, மாவிட்டபுரம் பகுதிகளில் தொடர்ந்தும் மோதல் நிகழ்கிறது.

ஒக்டோபர் 23

* காங்கேசன் துறைமுகம், சீமெந்துத் தொழிலகம் என்பன படையினரின் கட்டுப்பாட்டில் வந்தன.

ஒக்டோபர் 24

* உலக வங்கியிடம் இருந்து 87கோடி ரூபா நிதி உதவியை இலங்கை அரசு கோரியுள்ளது.

* கண்டியில் 23 தமிழ் வாலிபர்கள் கைதாகினர்.

ஒக்டோபர் 25

* யுத்தத்தை நிறுத்தும் பொறுப்பு அரசுக்கே முதலில் உள்ளது என பொகவந்தலாவையில் இ.தொ.கா.வும் மக்களும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

* கொழும்பு பத்திரிகையாளர்கள் யாழ் யுத்த முனைக்கு அரசால் கூட்டிச் செல்லப் பட்டனர்.

* அப்புத்தளை பிட்ரத்மலை பகுதியில் அத்துமீறிய குடியேற்றம், காணிப் பகிர்வு நிகழ்வதை நிறுத்துமாறு அப்பகுதி மக்கள் அரசைக் கோரியுள்ளனர்.

ஒக்டோபர் 26

* மட்டக்களப்பு ஈரோஸ் பொறுப்பாளர் கடத்தப் பட்டதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

ஒக்டோபர் 27

* நடிகை ருக்மணிதேவி நினைவாக முத்திரை வெளியிடப்பட உள்ளது.

ஒக்டோபர் 31

* மன்னார் முஸ்லிம்கள் பாதுகாப்பான இடம் சென்றதும் தாக்குதல் தொடரும் என அமைச்சர் ரஞ்சன் கூறியுள்ளார்.



நவம்பர் 1

* மட்டக்களப்பில் நிகழ்ந்த மோதலில் இரு படையினரும் ஐந்து புலிகளும் பலியானதாக அரசு அறிவித்தது.

* மட்டக்களப்பில் பாடசாலைகள் ஆரம்பித்துள்ளன.

* தென்னிலங்கையில் பொலிசார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இருவர் கொல்லப்பட்டனர்

நவம்பர் 2

* மன்னாரில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு படையினரின் தாக்குதல்கள் ஆரம்பித்தற.

* வெலி ஓயாவில் பத்து சிங்கள பொதுமக்களும் ஆறு படையினரும் புலிகளின் தாக்குதலில் பலியாகினர்.

* இந்தியக் கடவுச் சீட்டு பெற்ற இரு மலையகத் தொழிலாளர்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு மிரட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

நவம்பர் 3

* வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டமை தொடர்பாக ஆறு தமிழ்க் கட்சிகள் கூடிப் பேசியுள்ளன.

* மன்னார்ப் பகுதியில் கடும் மோதல்கள் நிகழ்ந்துள்ளன.

* முஸ்லிம் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என அமைச்சர் ரஞ்சன் கூறியுள்ளார்.

நவம்பர் 5

* மாவிட்டபுரத்தில் 11 படையினர் கொல்லப்பட்டனர்

நவம்பர் 6

* வடக்கு கிழக்கு புனர்வாழ்வு நடவடிக்கைக்கு 50கோடி டொலர் உதவி கிடைத்திருப்பதாக வவுனியாவில் ஜனாதிபதி பிரேமதாச கூறியுள்ளார்.

* மேலும் 25 ராணுவ முகாம்கள் திறக்கப்படும் என அமைச்சர் ரஞ்சன் கூறியுள்ளார்.

நவம்பர் 7

* பெற்றோல் விலை 25ரூபாவிலிருந்து 35ரூபா ஆக்கப்பட்டுள்ளது. எல்லா எரிபொருட்களதும் விலைகள் அதிகரிக்கப் பட்டுள்ளன.

* மாலைதீவிலுள்ள தமிழ் கெரில்லாக்கள் விடுதலையாகும் சாத்தியம் தெரிவதாக சித்தார்த்தன் (ஜ.ம.வி.மு) கூறியுள்ளார்.

* வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாகம் அவசியம் என ஈபிஆர்எல்எ:.வ் கூறியுள்ளது.

* புலிகளால் வடக்கில் கடத்தப்பட்ட 49 முஸ்லிம் வர்த்தகர்களை விடுவிக்க உதவுமாறு பாமிஸ் அமைப்பு (முஸ்லிம் வாலிபர் இயக்கங்களின் சம்மேளனம்) செஞ்சிலுவைச் சங்கத்திடம் கேட்டுள்ளது.

நவம்பர் 8

* அரச, உள்ளூராட்சி ஊழியர்களுக்கு 200ரூபா முதல் 300ரூபா வரையிலான சம்பள உயர்வு வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

* மாங்குளம் விமானத் தாக்குதலில் நான்கு பொதுமக்கள் பலியாகினர்.

* ஆயுதப்பயிற்சி பெற்று ஊர்காவல் படையில் பணிபுரிய 15,000 முஸ்லிம் வாலிபர்கள் தயாராக உள்ளதாக 'பாமிஸ்' தலைவர் கூறியுள்ளார்.

நவம்பர் 9

* இரகசிய பொலிஸ் தலைமை அலுவலகத்தில் இருந்து (4ம் மாடி) குதித்துத் தற்கொலை செய்த சரவணபவன் புலிகளுக்காக வாகனங்கள் வாங்குபவர் என மரண விசாரணையில் தெரியவந்துள்ளது.

* கிழக்கு மாகாணம் நூறு வீதம் அரச கட்டுப்பாட்டில் இருப்பதாக அமைச்சர் ரஞ்சன் கூறியுள்ளார்.

* யாழ் வைத்தியசாலை மீது அரச படைகள் விமானக் குண்டுவீச்சு நிகழ்த்தியுள்ளன.

நவம்பர் 10

* லண்டனில் அரசும் புலிகளும் பேசுவதை அரசு பகிரங்கப் படுத்தாவிடில் உண்மை வெளிப்படும்போது விளைவுகளை அரசே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்க வேண்டும் என தினேஷ் குணவர்த்தன கூறியுள்ளார்.

* தெற்கில் உள்ளோரை கிழக்கில் குடியேற்றி சமாதானத்தை நிலைநாட்டுவோம் என மகாவலி அமைச்சர் பேசியுள்ளார்.

நவம்பர் 11

* இலங்கைத் தூதர் சேபால ஆட்டிகலவுக்கும் புலிகள் பிரமுகர் கிட்டுவுக்கும் இடையே லண்டனில் பேச்சுகள் சுமுகமாக நிகழ்வதாக வீரகேசரி செய்தி வெளியிட்டுள்ளது. இந்தப் பேச்சுகள் கடந்த வாரம் மூன்று தடவை நிகழ்ந்ததாக கூறப்படுகிறது.

நவம்பர் 12

* அம்பாறை மாவட்டத்தில் புலிகளுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அரசு அறிவித்துள்ளது.

* ஏறாவூர்த் தமிழ் அகதிகள் வீடு திரும்பியபோது ஊர்காவல் படையினரால் விரட்டப் பட்டுள்ளனர்.

* சாவகச்சேரி விமானத் தாக்குதலில் நால்வர் பலியாகினர்.

நவம்பர் 13

* தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் ஜனவரி முதல் நாளொன்றுக்கு 60 ரூபாவாகும் என அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார்.

நவம்பர் 14

* மட்டக்களப்பில் யூரியா விற்பனை தடுக்கப்பட்டது. கண்ணிவெடியில் இது பாவிக்கப்படுவதாலேயே தடை விதிக்கப்பட்டதாக மட்டு இணைப்பதிகாரி கூறியுள்ளார்.

* வாழ்க்கைச் செலவைக் குறைத்து சம்பளத்தைக் கூட்டவேண்டும் எனக் கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

* தமிழ் மக்கள் இன்று விரும்புவது பூரண சுயாட்சி அமைப்பே என கருணாகரன் (பா.உ, ரெலோ) கூறியுள்ளார்.

நவம்பர் 15

* கடவுச் சீட்டுப் பரிசோதிக்கும் இயந்திரம் ஒன்றை நெதர்லாந்து அரசு இலங்கைக்கு வழங்கியுள்ளது.

நவம்பர் 16

* ஈபிடிபி, ரெலோ, புளொட் மூலம் புலிகளை இனங்காண தாம் முற்பட்டுள்ளதாக அமைச்சர் ரஞ்சன் கூறியுள்ளார்.

நவம்பர் 17

* நுவரெலியாவில் 25 கோரிக்கைகளை முன்வைத்து தோட்டத் தொழிலாளர்கள் நடத்தும் வேலை நிறுத்தம் இரண்டாவது வாரமாகத் தொடர்கிறது.

* புத்தளத்தில் முஸ்லிம் மதத் தலைவர் ஒருவர் துப்பாக்கி ஏந்தியபடி மதப்பிரசங்கம் ஒற்றை நிகழ்த்தியுள்ளார்.

* தமிழகத்தில் கைதாகும் போராளிகளை மாநில அரசு இரண்டு மூன்று தினங்களில் விடுவிப்பதாக இந்திய கடற்படை தலைமைத் தளபதி அட்மிரல் ராம்தாஸ் கூறியுள்ளார்.

நவம்பர் 18

* வவுனியா அகதி முகாம், வைத்தியசாலைக்கு இராணுவ உயரதிகாரிகள் விஜயம் செய்துள்ளனர்.

நவம்பர் 19

* யாழ் குடாநாடு வழமைக்குத் திரும்புவதாக அங்கிருந்து செய்திகள் வெளியாகியுள்ளன.

* 'மாவீரர் தினம்' நிகழ்வதையொட்டி வடக்கு விழாக்கோலம் பூண்டுள்ளது.

நவம்பர் 20

* யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஊரடங்கு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

நவம்பர் 23

* மாங்குளம் படைமுகாம் புலிகளால் தாக்கப்பட்டது.

நவம்பர் 25

* மாதுறு ஓயா திட்டத்தில் 20,000



தமிழ்க் குடும்பங்கள் குடியமர்த்தப்படும் என மாவலி அமைச்சர் கூறியுள்ளார்.

நவம்பர் 26

* மாங்குளம் முகாமில் மோதல் தொடர்கிறது.

* கிழக்கைப் பாதுகாக்க கிழக்கு மாகாண ஐக்கிய முன்னணி உருவாகும் என சபாநாயகர் அறிவித்துள்ளார்.

நவம்பர் 27

* மாங்குளம் முகாம் முற்றாக நிர்மூலமாகியது. 200 படையினரும், 100 புலிகளும் கொல்லப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.


நவம்பர் 28

* வவுனியாவில் எட்டுத் தமிழர்கள் கடத்தப் பட்டனர். ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார்.

* ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கு உதவி வழங்குவதாகக் கூறியது உண்மையில்லை என சிறிமாவோ கூறியுள்ளார்.

நவம்பர் 30

* புலிகளுடனான யுத்தத்தில் வெற்றி வெகுதூரம் சென்றுவிட்டதாக சிறிமாவோ பாராளுமன்றத்தில் பேசியுள்ளார்.



*உலகில் பலகோடி மக்கள் பசியாலும், பட்டினியாலும் வாடிக் கொண்டிருக்கையில் தமது மேலாதிக்கத்தை உலக ரீதியில் நிறுவ முயலும் அமெரிக்காவும், அதன் தொங்குசதையான பிரிட்டனும், சுயமான கருத்து, ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு சிறிதும் இல்லாத வேறு 26 நாடுகளும், பிராந்திய மேலாதிக்க வெறி பிடித்த ஈராக்குடன் 'குவைத்தை மீட்பதற்கான' யுத்தத்தைத் தொடங்கியுள்ளன. தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் மூலம் உலக சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கு முயற்சி எடுக்குமாறு உலகின் பல பகுதிகளில் இருந்தும் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை உதாசீனம் செய்து இந்த யுத்தம் தொடங்கி நிகழ்கிறது. மூன்றாம் உலக அபிவிருத்தியில் செலவு செய்யப்படக்கூடிய கோடிக்கணக்கான பணத்தை இரு தரப்பினருமே வீணாக செலவாக்குகின்றனர். யுத்தம் புதிய பரிமாணங்களை எடுக்கும் அபாயமும் நிலவுகிறது.*

*யுத்தம் தொடர்ந்து நிகழ்வதாலும் எல்லா தொடர்புச் சாதனங்களிலும் இந்த யுத்தம் பற்றிய (பெரும்பாலும் முன்பின் முரணான) செய்திகள் தொடர்ந்து வெளிவருவதாலும் யுத்தம் பற்றிய படைப்புகள் எதுவும் இந்த இதழில் இடம்பெறவில்லை.*

*சுவடுகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*....இப்போதெல்லாம் ஊர்க் கடிதங்களைப் பிரிப்பது சவப்பெட்டிகளின் மூடியைத் திறந்து பார்ப்பது போலாகி விட்டது. ஊரிலிருந்து கடிதம் எதுவும் வரவில்லையென்றால் இன்றைய தினம்வரை தெரிந்த ஒருவரும் சாகவில்லை; அம்மாவுக்கு ஒன்றும் நடக்கவில்லை என்று மனதுக்குச் சமாதானம் சொல்லிக் கொள்ளலாம். நாளை தபாற்பெட்டியைத் திறக்கும்வரை ஒரு தற்காலிக மன நிம்மதியை அமுல்படுத்திக் கொண்டு றெஸ்ரோறன்ரில் கோப்பை கழுவலாம்; அறைக்கு வந்து கோழி வெட்டி கறி காய்ச்சலாம்; பியர் குடித்துக் கொண்டு ரீ.வீ பார்க்கலாம்...*

**சிப்பி**

# அம்மா

கடிதப்பெட்டியினுள்ளே குவிந்துகிடந்த காகிதங்களில் பழுப்பு நிறத்தில் நீலக்கோடு போட்ட கடிதவுறை ஏதுவும் இருக்கவில்லை.

ரகுநந்தனின் படபடத்த மனம் சற்று ஆறுதலடைந்தது.

"அன்புள்ள ரகுநந்தா! ஐம்பதுவீதக் கழிவு தருகிறேன்; வாங்கமாட்டாயா?" என்ற 'நியூஸ்வீக்'காரனின் கொம்பியூட்டர்க் கெஞ்சலையும், "வரிகட்ட மறந்துவிட்டாய்! வட்டிபோடப் போகிறேன்" என்ற ஒஸ்லோ மாநகரசபையின் மிரட்டலையும், "மூன்று மணிநேர ஆபாசப்பட நாடாவை மலிவுவிலையில், சாதாரண கடிதவுறையில் அனுப்பிவைக்கவா?" என்ற சுவீடிஷ் விநியோகஸ்தனின் வேண்டுதலையும் காகிதக் குப்பைக்கென்று தனியாக சூழல் பாதுகாப்புவாதிகளால் வைக்கப்பட்டிருந்த பெட்டிக்குள் திணித்துவிட்டு, திரிக் ஸ்ரேசனுக்கு விரைந்தான்.



இப்போதெல்லாம் ஊர்க் கடிதங்களைப் பிரிப்பது சவப்பெட்டிகளின் மூடியைத் திறந்து பார்ப்பது போலாகி விட்டது. ஊரிலிருந்து கடிதம் எதுவும் வரவில்லையென்றால் இன்றைய தினம்வரை தெரிந்த ஒருவரும் சாகவில்லை; அம்மாவுக்கு ஒன்றும் நடக்கவில்லை என்று மனதுக்குச் சமாதானம் சொல்லிக் கொள்ளலாம். நாளை தபாற்பெட்டியைத் திறக்கும்வரை ஒரு தற்காலிக மன நிம்மதியை அமுல்படுத்திக் கொண்டு றெஸ்ரோறன்ரில் கோப்பை கழுவலாம்; அறைக்கு வந்து கோழி வெட்டி கறி காய்ச்சலாம்; பியர் குடித்துக் கொண்டு ரீ.வீ பார்க்கலாம்.

ரகுநந்தனின் இன்றையப் பொழுதை அலுவல்கள் மொய்த்திருந்தன. அம்மாவிடம் கொடுக்கச் சொல்லி செல்வராசா மாமாவிற்கு காசு அனுப்பவேண்டும்; சிசிலியாவின் பிறந்த நாளுக்குப் பரிசு ஏதாவது வாங்கவேண்டும்; வரித் திணைக்களத்திற்குச் சென்று வரிவீதத்தைக் குறைத்துத் தரும்படி விண்ணப்பிக்க வேண்டும்; குவிந்திருக்கும் உடுப்புகளைத் தோய்த்தாக வேண்டும். எல்லாவற்றையும் ஐந்து மணிக்குமுன் முடித்துக் கொண்டு தாமதம் எதுவுமின்றி ஆறு மணிக்கு சிசிலியாவிடம் போய்விடவேண்டும். இல்லையென்றால் அவளின் வெண்பனியொத்த தோழமையைச் சில தினங்களுக்கு இழக்க நேரிடும்.

ooo

செல்வராசா சிவஞானசுந்தரத்தை மூன்றாவது தடவையில் சரியாக டைப்செய்துவிட்ட வங்கியழகி ஒரு பத்து நிமிடம் காத்திருந்தால் உடனேயே டிராப்டைத் தயார் செய்து தருவதாக சொன்னாள். கடந்த ஐந்து வருடமாக செல்வராசா மாமாவின் பெயருக்குத்தான் அம்மாவுக்கு காசு அனுப்புவது வழக்கம். "குத்துக் கல்லாட்டம் ஐயா உயிரோட இருக்க நீ மாமாவின்ர பேருக்கு காசு அனுப்பிறயாம்" என்று கனடாவிலிருந்து தங்கச்சி கண்டனத்தைத் தெரிவித்த பிறகும் செல்வராசா மாமாவின் பெயருக்கே தொடர்ந்தும் அனுப்பி வருகிறான். ஆரம்பத்தில் ஐயாவின் பெயருக்கு அனுப்பிய காசோலைகள் ஐயாவை வேட்டி அவிழ்வது கூடத் தெரியாமல் நடுவீதியில் வீழ்த்தி அம்மாவைத் தலைகுனிய வைத்தன; "மனிசன் காசைக் காசெண்டு பாராமல் இழுத்தெறியும்" என்று ஐயாவின் புகழ் பரப்பின; ஆனால் 'அவசரத்துக்கு ஐம்பது நூறென்று' அம்மா அயல்வீடுகளுக்கு அலைவதை மட்டும் தடுக்கவில்லை. அதன் பிறகுதான் செல்வராசா மாமாவை நாடத் தொடங்கினான். ஐயாவைப்பற்றி நன்கறிந்த செல்வராசா மாமா முழுத் தொகையையும் அம்மாவிடம் கொடுக்காமல் அம்மா கேட்கும்போது மட்டும் தேவையான பணத்தைக் கொடுத்து வந்தார். கை வரண்டுபோனதால் கவலையடைந்த ஐயா கனடாவிலும் ஜேர்மனியிலும் வாழும் மற்றப் பிள்ளைகளிடம் "ரகுநந்தன் இனி எனக்கு மகனில்லை... நீங்கள்தான் எனது பிள்ளைகள்" என்று பிரகடனம் செய்ய, அவர்களும் அகமகிழ்ந்து தங்கள் காசோலைகளை ஐயாவின் பெயருக்கு சிலதடவை அனுப்பினார்கள். ஆனால் ரகுநந்தனைப் போல் தொடர்ந்து ஊருக்குப் பணம் அனுப்ப அவர்கள் பிரியப் படவில்லை; பதிலாக ரகுநந்தனை ஐயாவின் பெயருக்கு அனுப்பச் சொல்லி வற்புறுத்தினார்கள். "வீட்டைவிட்டு வெளிக்கிடாத அம்மாவுக்கு ஏன் காசு?...நீ செல்வராசா மாமாவிட்ட அனுப்புற காசு அம்மாட்ட ஒழுங்காப் போய்ச் சேருமெண்டு நினைக்கிறியா? ... அம்மா விளக்கங் குறைஞ்ச மனிசி...அவர் காட்டுற கணக்க மனிசி நம்ப வேண்டியது தானே.." என்று கடிதங்கள் மூலம் ஐயா கொடுக்கும் தொந்தரவு தாங்காமல் ஜேர்மன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிமார்கள் ஆலோசனை சொல்வார்கள். "டேய் என்ர வேலைபார்க்க எனக்குத் தெரியும் ... உங்கட அலுவல்கள நீங்க பாருங்க" என்று ஆத்திரத்தோடு ரகுநாதன் பதிலளித்து 'அந்தாள் ஒரு போக்கு' என்று அவர்களால் விமர்சிக்கப் பட்டிருக்கிறான்.

வங்கியிலிருந்து பெற்ற டிராப்டை அருகிலிருந்த தபால்நிலையத்தில் சேர்ப்பித்துவிட்டு தொய்யனைத் தாண்டிச்செல்லும் பஸ் ஒன்றில் இடம் பிடித்தான்.

இந்தமுறை நாற்பது வீத வரி அட்டையை இரக்கமில்லாமல் அனுப்பியிருந்தார்கள். அதை இருபது அல்லது இருபத்தைந்து வீதமாக்கிப் பெறுவதற்கு வருடா வருடம் ஒரு குட்டிச் சண்டை அவசியம். ஊரில் இருக்கும் பெற்றோரும் ரகுநந்தனின் வருமானத்திலேயே வாழ்கிறார்கள் என்று ஊரிலுள்ள ஒரு வழக்கறிஞர் யாராவது உறுதிப்படுத்தினால் வருட இறுதியில் கணிசமான தொகை வருமானத்திற்கு வரி விலக்களிப்பார்கள். செல்வராசா மாமாவைக் கேட்டிருந்தான். அவரும் பெற்று அனுப்புவதாக எழுதியிருந்தார். ஆனால் ஆயிரம் சோலிகளுள்ள அவர் இன்னும் அனுப்பவில்லை. அவர் அனுப்பும்போது அனுப்பட்டும் என்று இருக்க வேண்டியதே தவிர அவரை வற்புறுத்துவது அவனால் இயலாத காரியம். பொறுப்போடு செய்வார்கள் என்று வேறு யாரிடம் கேட்கலாம்? 'குத்துக் கல்லாட்டம் உயிரோடிருக்கும் ஐயா' ரகுநந்தனின் காரியமென்றால் மகிழ்ச்சியோடு மறுத்து விடுவார். அம்மா?..... அம்மா தான் 'வீட்டைவிட்டு வெளிய போகாத விளக்கங்குறைஞ்ச மனிசி'யாகப் பிரகடனப் படுத்தப்பட்டு விட்டாளே!

ஊற்றெடுக்கும் கண்களை ரகுநந்தன் இறுக்கமாக அழுத்திக்கொண்டான்.

OOO

வரித்திணைக்களத்தின் வரிசையிலக்கச் சீட்டின்படி குறைந்தது இரண்டுமணி நேரமாவது காத்திருக்க வேண்டும் என்று கணக்கிட்ட ரகுநந்தன் அந்த வேலையை இன்று கைவிடத் தீர்மானித்தான். இனித் 'தேபான்' எடுத்துக் 'கிளாஸ்மகஸீனு'க்குப்போய் சிசிலியாவுக்குப் பரிசு வாங்கவேண்டும்.

ஒருநாள் ரகுநந்தன் கன்ரீனில் பணம் கொடுக்கும்போது பின்னால் நின்ற சிசிலியா சட்டென்று பேர்ஸை பறித்துக்கொண்டாள்.

"நீ ஒரு சினேகிதத் துரோகி! உன் அழகான காதலியைப் பற்றி என்னிடம் இதுவரை எதுவுமே நீ சொல்லவில்லையே!" – அவளின் கைகளில் முப்பத்தைந்து முன் வருடங்களுக்கு எஸ்.எஸ்.ஸி. பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருந்த அம்மா அழகாகச் சிரித்தாள்.

அது அவனின் அம்மாவின் படம் என்று சிசிலியாவை நம்பவைக்க ரகுநந்தன் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. அம்மா முதலும் கடைசியுமாய் வாழ்க்கையிலே எடுத்த ஒரேயொரு படம் அது ஒன்றுதான் என்று அவளை நம்ப வைப்பது இலகுவான காரியமல்லவே! தங்கச்சியின் கல்யாண வீட்டுப் படங்களில் கம்பீரமாய் போஸ் கொடுக்கும் ஐயாவிற்குப் பக்கத்தில் அம்மா கூனிக்குறுகி மிரண்டபடி நிற்கும் ஒன்றிரண்டு படங்களில் முகம் தெளிவாகத் தெரியவில்லை. அந்த 'விளக்கங் குறைஞ்ச மனிசி'யைத் தனியாக படமெடுத்து பிலிமை வீணாக்க அவர்களும் விரும்பவில்லை. சிலவேளை



கடமைக்காக அவர்கள் கேட்டிருந்தாலும் அம்மா பிடிவாதமாய் மறுத்திருப்பா.

ரகுநந்தனுக்கு ஒரு தடவை அந்தப் படத்தைப் பார்க்கவேண்டும் போலிருந்தது.

அம்மாவின் வடிவில் ரகுநந்தனுக்கு மிகுந்த பெருமை.

"அம்மா நீ சரியான வடிவு" – ஆறேழு வயதில் தான் அம்மாவிடம் சொன்னதும், அம்மா "சீ..ஆ" என்று ஆச்சரியப்படுவது மாதிரி நடித்து, "என்ர குஞ்சுப் பெடியன்தான் சரியான வடிவு" என்று சொல்லிக் கட்டிப் பிடித்துக் கொஞ்சியதும் ரகுநந்தனின் இறந்தகால நாட்குறிப்பின் இனிமையான ஒரு பக்கம்.

ஆனால் அந்த 'வடிவு'தான் வசதியான குடும்பத்தில் ஒரேயொரு மகனாகப் பிறந்து அரசாங்க உத்தியோகம் பார்த்த ஐயாவை அம்மாவின் வாழ்க்கையில் அறிமுகப்படுத்திய கொடுமையைப் புரிந்தது.

கட்டினால் அம்மாவைத்தான் கட்டுவேன் என்று ஐயா பிடிவாதமாய் நின்றபோது கொழுத்த சீதனத்தை எதிர்பார்த்திருந்த ஐயாவின் பெற்றோருக்கு ஏமாற்றத்தோடு சம்மதிப்பதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

'அஞ்சு சதம் சீதனம் வேணாம்' என்றபடி வந்த ஐயாவின் சம்பந்தம், கணவனை இழந்து ஆறு பிள்ளைகளை வளர்த்தெடுக்க வழியின்றித் தவித்துக்கொண்டிருந்த அம்மாவின் தாயைப் பொறுத்தவரையில் 'செத்துப்போன புருசன் செய்த புண்ணியம்'. மகளின் விருப்பத்தைக் கேட்கும் அம்மாவும், தாயிடம் தன் விருப்பத்தைச் சொல்லத் துணியும் மகளும் ஆயிரத்தித் தொள்ளாயிரத்து ஐம்பத்தெட்டாம் ஆண்டில் கற்பனைப் பாத்திரங்கள்.

அம்மா ஐயாவின் மனைவியான அடுத்த வருசமே அம்மாவின் தாயும் சகோதரங்களும் வீட்டைவிட்டு ஐயாவினால் வெளியேற்றப் பட்டார்கள். அவர்கள் வீட்டுக்கு வருவதோ அல்லது அம்மா அவர்களைச் சந்திப்பதோ ஐயாவினால் தடைசெய்யப் பட்டது. அதை மீறிய சந்தர்ப்பங்களில் அம்மாவின் வாயில் இரத்தம் கசிவது வழமையாகிப் போனது. தங்களைச் சந்திப்பதனால் அம்மாவுக்குக் கிடைக்கும் சித்திரவதையையாவது தடுக்கும் எண்ணத்தில் அம்மாவின் தாயும் சகோதரங்களும் ஊரைவிட்டே போனார்கள். அம்மாவுக்குத் துணை, ஆறுதல் எல்லாமே நான்கு வயதான ரகுநந்தன் என்றாகிப்போனது.

அவனுக்கு நினைவிலிருக்கும் எல்லா இரவுகளிலும் அம்மா அழுவதைக் கண்டிருக்கிறான். அதனால்



*இன்று போர் வெறியோடு சவூதி அரேபியாவில் போய்க் குவிந்திருக்கும் அமெரிக்கப் படை வீரர்களிடையே உலாவும் பிரபலமான ஹாஸ்யம் இதுதான்.*

*"அதோ அந்த சிறிய தொலைபேசி கதைக்கும் கூடத்துள் ஒரே நேரத்தில் 50 ஈராக் நாட்டவரை எப்படி நிறுத்தமுடியும்?"*

*"பூ...இது என்ன பெரிய விசயம்?.. ஈராக்கியரிடம் போய் அந்த தொலைபேசிக் கூடம் உங்களுடையதல்ல என்று கூறிப்பாருங்கள் அவ்வளவு தான்!..."*

*சு.முரளி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவுகளையே ரகுநந்தன் வெறுத்தான். நடுச்சாமங்களில் அடிபட்டு அலறும் அம்மாவை, "அஞ்சுசதம் சீதனம் தந்தனியேடி ..இப்ப நீ வராட்டி ..", என்று உறுமும் ஐயாவைப் பலியாடு மாதிரித் தொடர்ந்து இருளில் மறையும் அம்மாவை காப்பாற்ற முடியாமல் அவனும் பயந்து சத்தமில்லாமல் அழுதிருக்கிறான். கிளிமாமி புருசனையும், ராசலிங்கம் சித்தப்பாவின் மகனையும் பலியெடுத்த நரிக்குண்டுப் பஞ்சமி ஐயாவையும் ஒரு நாள் பலியெடுக்கும் என்ற நம்பிக்கையில் நித்திரையாகிப் போவான்.

O O O

பீத்தோவனின் ஒன்பது சிம்போனிகளின் தொகுப்பொன்று சுமாரான விலையில் கிடைத்தது. இசைப் பைத்தியமான சிசிலியாவுக்கு பொருத்தமான பரிசை வாங்கமுடிந்ததில் மனம் திருப்தியடைந்தது. இனி அறைக்குப் போகவேண்டியதுதான். இரண்டு முப்பத்திமூன்று திரிக்கைப் பிடிக்க ரகுநந்தன் ஓடுவது போல் நடக்க வேண்டியிருந்தது.

பின்னேரப் பொழுதுகளில் தண்ணியள்ள அம்மாவுக்குத் துணையாக வயல்வெளிக்குப் போவது ரகுநந்தனுக்கு மிகவும் பிடிக்கும். ஐயாவின் இராணுவத்தனமோ தம்பிகளின் கூச்சல்களோ தங்கச்சியின் சிணுங்கலோ இல்லாத செம்மஞ்சள் நிறமான அந்த இரண்டு மூன்று மணிநேரம்தான் அம்மா உயிர்வாழும் காலம் என்று ரகுநந்தன் நினைப்பான். கூடு திரும்பும் பறவைகளும், "அம்மாவும் பிள்ளையும் தண்ணிக்குப் போறியளே.." என்று கேட்டபடி தண்ணிக் குடத்துடன் நடக்கும் ஒரு சில பெண்களையும் தவிர சந்தடியேதும் இருக்காது. பரந்த வெளியும் விரிந்த வானமும் அம்மாவின் நீளக்கூந்தலைக் கலைக்கும் வயற்காற்றும் ரகுநந்தனுக்கு உற்சாகத்தை வாரியிறைக்கும். வானத்தைத் தொடச் சொல்லி விர் விர் என்று கற்களை வீசுவான்.

தேவதைக் கதைகளில் வருவதுபோல் இந்த மாலைப் பொழுதுகளில் அம்மா உருமாறும் இரகசியம் ரகுநந்தனுக்கு மட்டுமே தெரியும்.

இதே வயல்வெளியில் கரைந்துபோன இளமைக்கால ஞாபகங்கள் அம்மாவைப் பிடித்துக் கொள்ளும். "குழப்பாமல் கேளடா" என்று வலிக்காமல் குட்டி விட்டு அம்மா 'காற்றினிலே வரும் கீதம்' பாடுவா. ரேடியோவில் கேட்பதுபோல் இருக்கும்.

"ஒரு சங்கீத ரீச்சராக வரவேணுமெண்டு சரியா ஆசைப்பட்டனான்"

வானத்தைப் பார்த்தபடி அம்மா சொல்லுவா.

"முந்தி வேல எடுக்க காசு தேவையில்ல ... நல்லாப் படிச்ச எல்லாருக்கும் வேல கிடைக்கும் .. நானும் நல்லாப் படிச்சன் .. ஆனா.." –அம்மாவின் பெருமூச்சு எப்போதும் நீளமாகவிருக்கும்.

மிகுதி ரகுநந்தனுக்குத் தெரியும். 'அஞ்சுசதம் சீதனம் வாங்காமல்' அம்மாவின் வாழ்வில் படையெடுத்த ஐயா அம்மாவின் எத்தனை கனவுகளில் தீயை வைத்திருக்கிறார்!

"சரி.. அதெல்லாம் போச்சடா .. இப்ப நீ நல்லாப் படிக்கவேணும் .. தம்பிகளையும் தங்கச்சியையும் படிப்பிக்க வேணும்.. அதுதான் இப்ப என்ர ஆசை"

பொசுங்கிப்போன கனவுகளுக்குப் பதிலாக அம்மா புதிய கனவுகளை வளர்த்துக் கொள்ளுவா.

இந்த மாதிரி ஒரு பின்னேரப்பொழுதில்தான், "ராசா கவனமாப் படியுங்கோ" என்று காணும்நேரங்களில் சொல்லிய வண்ணம் புல் நசியாதபடி நடக்கும் 'கடைக்கார மகாலிங்கண்ண'ரும் தானும் ஒருவரை யொருவர் விரும்பியிருந்ததாக அம்மா சொன்னா. ரகுநந்தன் மிகுந்த ஆச்சரிப்பட்டான்.

மகாலிங்கண்ணனின் கண்களில் தெரியும் நேசத்துக்கும், வாஞ்சைக்கும் காரணம் இதுதானா?

கடவுளே இந்த மகாலிங்கண்ணன் எனக்கு ஐயாவாக வந்திருக்கக் கூடாதா?

பல பெண் சகோதரிகளுடன் பிறந்த மகாலிங்கண்ணர் தன் கடமைகளை முடித்துவிட்டு வரும்வரை அம்மா காத்திருப்பதாகத் தான் இருந்தாவாம். ஆனால் இடையில் 'அஞ்சு சதம் சீதனமில்லாமல்' ஐயா குறுக்கிட்டபோது மகாலிங்கண்ணரால் எதுவும் செய்ய முடியவில்லை. ஒருவருக்கும் தெரியாமல் இருவரும் தங்கள் மனங்களை குழிதோண்டிப் புதைத்துவிட்டு மௌனமாகிப் போனார்களாம்.

இந்தப் பரிதாபத்துக்குரிய அம்மாவிற்கு பதினைந்து வயதான தன்னால் என்ன செய்ய முடியும் என்ற சிந்தனைகள் ரகுநந்தனைத் தாக்கத்தொடங்கின.

"குஞ்சு நேரம் போச்சடா.... கொல்லப் போறார்.... சுறுக்கா வா" என்றபடி நடக்கும் அம்மாவில் பயம் தொற்றிக்கொள்ளும்.

வயல்வெளியின் முடிவில் வரிசையாய் நிற்கும் பனைகளின் பின்னால் விழுந்து கொண்டிருக்கும் சிவப்புச் சூரியனை ரகுநந்தன் பிடித்திழுத்து நிறுத்த நினைப்பான்.

இருண்ட கோட்டையின் கதவுகளைத் திறந்து அம்மாவும் அவனும் பயந்து பயந்து நுழைகையில் "ஏனடி இவ்வளவு நேரம்.. எவனோட கிடந்திற்று வாறாய்"–





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதையில் தள்ளாடும் ஒற்றைக் கொம்பு இராட்சதனின் உறுமல் கோட்டைச் சுவர்களில் பட்டு எதிரொலிக்கும்.

O O O

சலவை யந்திரத்திலிருந்து எடுத்த துணிகளைக் காயப்போட அவகாசம் இல்லை. நேரம் ஐந்தைத் தாண்டியிருந்தது. இப்போது புறப்பட்டால்தான் ஆறுமணிக்கு சிசிலியா வீட்டில் நிற்கலாம்.

ஒரு நாள் ரகுநந்தன் வீடு திரும்பியபோது அம்மாவின் தலையில் ஒரு பெரிய கட்டிருந்தது. தம்பிகளின் தங்கச்சியின் முகங்களில் ஒருவித கலவரம் தெரிந்தது. என்ன நடந்தது என்று கேட்டபோது தங்கச்சிதான் பதில்சொல்ல முன்வந்தாள்.

"ஐயா சாடையாத் தள்ளி விட்டிருக்கிறார்.. சிவர் விளிம்பில தல அடிபட்டுட்டுது"

ரகுநந்தன், தன்னால் இப்படி ஆத்திரப்பட முடியுமா என்று பின்னர் பலதடவைகள் நினைத்து நினைத்து ஆச்சரியப் பட்டிருக்கிறான். மற்றவர்களால் தொடுவது கூடத் தடை செய்யப்பட்டு பளபளவென்று மினுங்கிய தனது றலி சைக்கிள் விறகு கொத்தும் கோடாரியால் சின்னாபின்னப் படுத்தப்படுவதைத் தடுக்கத் திராணியற்று அதிர்ச்சியுடன் ஐயா பார்த்துக் கொண்டிருந்தார்.

"இந்த மனிசன்ர சம்பளம் வேணாம் அம்மா.. இந்தாள வீட்டை விட்டுப் போகச்சொல்லு.. நான் படிக்கிறத விட்டுட்டு ஏதாவது வேல தேடுறன்"

ரகுநந்தன் அழுதபடி சொன்னான்.

அம்மா திடுக்கிட்டுப் போனா.

"டேய் என்ன விசர்க்கதை கதைக்கிறாய் நீ... குமராப் போய் நிக்கிற உன்ர தங்கச்சிய மறந்திற்றா பேசுற ... பிள்ளயள் வளர்ந்தவுடன புருசனத் திரத்திப் போட்டாள் எண்டு இந்த ஊர் திண்டு துப்புமடா .. விசர்க்கதை கதையாம உன்ர படிப்பலுவல்களப் போய்ப்பார்" – பதைத்தபடி அவனை அம்மா விரட்டினா.

சைக்கிள் துவம்சத்தின் பின்னர் ரகுநந்தன் நாட்டில் இருக்கும் வரை ஐயா அம்மாவுக்கு கை நீட்டும் பழக்கத்தை தற்காலிகமாக மறந்து போனார்.

O O O

நாளைக்கு அதிகாலையில் வேலைக்குப் போகவேண்டும். அதனால் உணவுக்குப்பின் தொடங்கிய 'அக்குவாவிற்றா' நுகர்வில் பங்குகொள்ளாமல் சிசிலியாவிடமிருந்து விடைபெற்றான்.

தெருவிளக்குகள் பனிப்புகாருள் புதைந்தபடி மினுமினுக்க, வீதியெங்கும் இரவு அமைதியாய் விரிந்து கிடந்தது. ரக்ஸி ஸ்ரான்டில் காத்திருந்த இரண்டுபேரைத் தவிர மனித நடமாட்டம் எதுவும் இல்லை. மெல்ல மெல்ல ஈரத்தென்றல் தன்னைச் சூழுவதை உணர்ந்த ரகுநந்தன் கால்களை உற்சாகப் படுத்தினான். நேரம் இரவு ஒன்றரை மணியாகியிருந்தது. இந்நேரம் ஊரில் ஐந்தரை ஆறு மணியாகியிருக்கும். வீட்டின்மீது குண்டு விழாமலிருந்தால் ஐயா நித்திரையாயிருப்பார். அம்மா ஐயாவுக்கு முட்டைக் கோப்பி போடுவதற்கு எழும்பியிருப்பா.

<u>தமிழ் நாதம்</u>

ஒஸ்லோவில் வெளிநாட்டவர்க்கான வானொலி ஒலிபரப்பான Radio Immigranten வழங்கும் தமிழ் ஒலிபரப்பு ஞாயிறு மாலை ஆறு மணிக்கு பண்பலை வரிசை (Fm) 101,1 மீற்றரில் ஒலிபரப்பாகிறது. தற்போது புதிய நிகழ்ச்சிகள் வாரந்தோறும் ஒலிபரப்பாகின்றன.

செய்தியாளன்



## நோர்வே

எதுவித ஆர்ப்பாட்டமும் இன்றி அமைதியான முறையில் கடந்த வருடம் புரட்டாதி மாதம் நோர்வேயில் அரசியல் மாற்றம் ஒன்று இடம்பெற்றுள்ளது. சிறுபான்மை, முக்கட்சி வலதுசாரிக் கூட்டணி ஆட்சி பதவிவிலக தேர்தலுக்கு முன்பிருந்த தொழிற்கட்சி ஆட்சி (இம்முறை தனியாக) திரும்பவும் ஏற்பட்டுள்ளது. குறுகிய காலத்தில் நோர்வேயில் மூன்று தடவை பிரதமராகும் வாய்ப்பு தொழிற்கட்சித் தலைவி குறுாஹாலம் புருண்ட்லாந்துக்கு ஏற்பட்டுள்ளது. (1990ம் ஆண்டிற்கான இந்திரகாந்தி சமாதான விருது இவருக்கே வழங்கப் பட்டது.)

தொடர்ந்து வந்த 'தொடரும் நெருக்கடி' கட்டுரையில் குறிப்பிட்டிருந்தபடியே கடந்த ஒரு வருட காலமாக மிகுந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆட்சி நடத்திய வலதுசாரிக் கூட்டணியில் பங்கேற்றிருந்த வலதுசாரிக் கட்சிக்கும் (Høyre), மத்திய கட்சிக்கும் (SP) ஐரோப்பிய பொருளாதார சமூகம் தொடர்பாக ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளே வலதுசாரி கூட்டணி அரசின் பதவி விலகலுக்கு முக்கிய காரணியாகும்.

அண்மைக்கால கருத்துக் கணிப்பீட்டின்படி 70% நோர்வேஜியர்கள், நோர்வே ஐரோப்பிய சமூகத்துடன் இணைவதை விரும்புகின்றனர். இவ்வடிப்படையில் நோர்வேயை ஐரோப்பிய சமூகத்துடன் இணைக்கும் முயற்சியில் வலதுசாரிக் கட்சி துரிதமாக இயங்கியது. ஐரோப்பிய சமூகத்தில் 1992ல் சாதாரண அங்கத்துவம் பெற்று இரு வருடங்களில் முழு அங்கத்துவ நாடாக நோர்வே மாறும் வகையில் கட்சி திட்டங்களைத் தீட்டியது. இந்தப் போக்கு மத்திய கட்சிக்கு உவப்பானதாக இருக்கவில்லை. மத்திய கட்சி இப்போக்கை தீவிரமாக எதிர்த்தது. இவ்வாறு நோர்வே ஐரோப்பிய சமூகத்துடன் இணைவதால் எதிர்காலத்தில் சமூக, பொருளாதார விடயங்களில் மட்டுமன்றி அரசியல் விடயங்களிலும் நோர்வே கடும் பாதிப்புக்கு ஆளாகும் என மத்திய கட்சி கருதுகிறது. தவிர பெருமளவு (தேவைக்கதிகமாக) விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப் படுத்தும் ஐரோப்பிய சமூகத்துடன் நோர்வே இணைவது, அரசின் மானியத்தில் பெருமளவு தங்கியுள்ள இந்நாட்டு விவசாயிகளை வீதியில் நிறுத்திவிடும் என மத்திய கட்சி கருதுகிறது.

இவ்வாறு இரு கட்சிகளும் முரண்பட்டதையடுத்து கூட்டணியில் இருந்த மற்றக் கட்சியான கிறிஸ்தவ மக்கள் கட்சி (KrF) மத்திய கட்சி அரசை விட்டு வெளியேறுமாயின் தானும்

நோர்வேயின் 'மக்கள் அரசர்' ஊலா <u>V</u> தனது 87வது வயதில் மாரடைப்பால் மரணமானார். நோர்வே மக்களின் மிகுந்த அபிமானத்தைப் பெற்றிருந்த அவர் இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது நோர்வேயின் அரசராக இருந்தார். ஆயிரக் கணக்கான நோர்வேஜிய மக்கள் அவரது பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துகின்றனர். மன்னரது பூதவுடல் ஜனவரி மாத இறுதியில் அடக்கம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேறுவதாக அறிவித்தது. எனினும் வலதுசாரி கட்சி தனித்து அரசமைப்பதை தாம் ஆதரிப்பதாயும் அக்கட்சி கூறியது. ஆனால் இந்த நிலைப்பாட்டை மத்திய கட்சி வரவேற்கவில்லை. மத்தியகட்சி தனது ஆதரவை முற்றாக விலக்கிய நிலையில் வலதுசாரி அரசு பதவி விலக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

கூட்டணி அரசின் கடைசி பாராளுமன்றக் கூட்டத் தொடர் முடிந்தபின் பத்திரிகையாளர்களைச் சந்தித்த மூன்று கட்சிகளினதும் தலைவர்கள் புன்முறுவலுடன் பத்திரிகை நிருபர்களிடமிருந்து விடைபெற்றனர். தாம் ஒவ்வொருவரும் நாட்டின் எதிர்கால நலன் கருதி தத்தமது கொள்கைகளில் உறுதியாய் இருப்பதாயும், அரசியல் ரீதியான முரண்பாடுகளே தமக்குண்டு எனவும், தமக்கிடையே பாரம்பரிய உறவுகள் தொடர்ந்தும் பேணப்படும் எனவும் கூறினர். இதன் பின் யான்.பி.சீசே



தலைமையிலான கூட்டணி பதவி விலக ஆட்சி அமைக்கும் பொறுப்பு தொழிற் கட்சிக்கு வந்தது.

கடந்த ஒரு வருட காலமாக ஆட்சி நடத்திய வலதுசாரிக் கூட்டணி காலத்தின் திட்டங்களில் சில, வருட இறுதியில் சாதகமான நிலையைத் தோற்றுவித்ததையும் மறுப்பதற்கில்லை. குறிப்பாக 89/90 காலப் பகுதியில் ஏறுமுகமாக சென்றுகொண்டிருந்த வேலையற்றோர் வீதம் (4,5) கடந்த வருட இறுதியில் குறைந்தளவில் வீழ்ச்சிப் போக்கைக் காட்டியது. ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் பணவீக்கம் பெருமளவு கட்டுப்படுத்தப் பட்டது. இதன் விளைவாக கடந்த 30வருட காலத்தில் முதல் தடவையாக 1990ல் 'நுகர்வோர் விலைச் சுட்டெண்' 4,1ஆகக் குறைந்தளவில் மாத்திரமே அதிகரித்தது. இதற்கு சந்தைப் படுத்தலில் ஏற்பட்ட தேக்க நிலையே காரணம் எனக் கூறப்பட்டாலும் பொதுவில் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் சந்தைப்படுத்தலில் 1990ல் கடும் நெருக்கடியை எதிர்நோக்கியமையும் குறிப்பிடத்தக்கது. தவிர பொதுத் துறை நிறுவனங்கள் மீதான செலவின கட்டுப்பாடுகளும்/ செலவினங்கள் மீதான வெட்டும், மற்றும் சமூக கொடுப்பனவு நிறுவனங்கள் மீதான புதிய கட்டுப்பாடு, சீராக்கங்களும் ஆட்குறைப்பும் குறிப்பிடப் படவேண்டியன. கடந்த வருட நடுப்பகுதியிலேயே இந்நிறுவனங்கள் புதிய உத்வேகத்துடனும் சீராக்கத்துடனும் இயங்கத் தொடங்கின. மறுபுறம் நிதித்துறையில் பெருமளவு முடங்கலும் பங்குச் சந்தையில் பெருமளவு தேக்கமும் காணப்படுகின்றன. 1989ல் 200கோடி குறோணர்கள் நட்டத்தில் இயங்கிய வங்கிகளின் 1990க்கான தேறிய நட்டம் 800கோடி குறோணர்களைத் தாண்டிவிட்டது. வளைகுடா நெருக்கடியைத் தொடர்ந்து நன்மையடைந்த நாடுகளில் நோர்வேயும் ஒன்று. மேலதிகமாக கிடைத்த எண்ணெய் வருமானத்தின் மூலம் சுமார் 4000 கோடி குறோணர்களாயிருந்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையைக் குறைக்கக் கூடியதாயிருந்த போதும் நாட்டில் புதிய முதலீடுகள் மேற்கொள்ளப் படவில்லை. 1990ல்தான் நீண்ட காலத்துக்குப் பின்னர் பத்திரிகைத் துறையினரின் ஒட்டு மொத்தமான வேலை நிறுத்தமும், தொலைக் காட்சி, வானொலி நிறுவனங்களின் வேலை நிறுத்தமும் இடம் பெற்றது. 1990ல் போக்குவரத்து உட்பட பல்வேறு துறைகளும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டன.

### நோர்வே'90

* பலரைத் திடீர் பணக்காரர் ஆக்கும் லொத்தோவின் மிகப் பெரிய பரிசுத் தொகையை பேர்கன் பகுதியைச் சேர்ந்த ஹெல்க எரிக்ஸன் பெற்றார். இவர் பெற்ற அறுபது லட்சம் குறோணர் தொகையைவிட அதிக தொகை டிசம்பர் மாத லொட்டோ ஒன்றுக்கு வழங்கப்பட இருந்த போதும் பரிசு ஐவருக்கிடையே பங்கிடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டமையால் தனியொருவர் பெற்ற பரிசுத் தொகை குறைவாகவே இருந்தது.
(இந்த) நாட்டான்


* 1990ல் மிக அதிக விற்பனையான பானம் வழமை போல கொக்கா கோலா தான். மொத்தம் 55 கோடி போத்தல் கொக்கோ கோலா நோர்வேயில் விற்பனையாகியிருக்கிறது.
(இந்த) நாட்டான்

### நோர்வே'90

* கடந்த வருடம் ஜனவரி 12ம் திகதியே நோர்வேயில் மிகக் குறைந்த வெப்பநிலை (1990ல்) அவதானிக்கப் பட்டது. பின்மார்க் மாவட்டத்தின் கறாஷொக் என்ற இடத்தில் -42 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவானது.
கடந்த வருடத்தின் மிகக் கூடிய வெப்பநிலை நெஸ்பியன் எற்ற இடத்தில் 31பாகை வெப்பநிலை ஓகஸ்ட் மூன்றாம் திகதி பதிவாகியது.
(இந்த) நாட்டான்

### நோர்வே'90

* உயரமான கட்டிடங்களுக்குப் புகழ் பெற்றிராத நோர்வேயின் மிக உயரமான கட்டிடம் 1990ல் திறந்து வைக்கப்பட்டது.



ஒஸ்லோ நகரின் மையத்தில் அமைந்துள்ள ஒஸ்லோ பிளாசா என்ற ஹோட்டல் 37மாடிகளைக் கொண்டது. உயரம் 117 மீற்றர்.
(இந்த) நாட்டான்

வலதுசாரி கூட்டணி அரசில் கடந்த ஒரு வருட காலமாக அங்கம் வகித்த வலதுசாரிக் கட்சியின் செல்வாக்கு கடந்த இருவருட காலமாக பெருமளவில் குறைந்து கட்சியின் எதிர்காலம் பற்றிய கேள்வியை எழுப்பியுள்ளது. இதுவரை முதலாம் இரண்டாம் இடங்களில் இருந்துவந்த கட்சி மூன்றாம் நான்காம் இடங்களுக்குத் தள்ளப்பட்டு விடுமோ எனப் பலரும் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். வெகு அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பீட்டின்படி (11.01.91) கட்சியின் செல்வாக்கு கடந்த 110 வருடங்களில் முதற் தடவையாக 14,4% என்ற நிலைக்கு வந்துள்ளது. 1949ல் பொதுத் தேர்தலின்போது கட்சி பெற்ற

*வலதுசாரிக் கட்சியின் தலைவராக இருந்த யான்.பி.சீசே தனது பதவயில் இருந்து அண்மையில் விலகியுள்ளார். இவருடன் இவரது முக்கிய உதவியாளர்கள் சிலரும் பதவி விலகியுள்ளனர்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15,9%தான் இதற்கு முன்னர் மிகக் குறைந்த ஆதரவாக இருந்தது. இது கட்சியின் அபிமானிகள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் 25 - 40% வரை செல்வாக்கு பெற்றிருந்த இக்கட்சி உடனடியாக 'விற்றமின்' குளிசைகளை விழுங்காவிட்டால் இவ்வருடம் நிகழவுள்ள மாவட்ட, மாநகரசபைகட்கான தேர்தல்களில் (Fylke, Kommune valg) இக்கட்சி 'காணாமல்' போய்விடும் என்று முன்னணிப் பத்திரிகையான 'ஆப்தன் பூஸ்தன்' எழுதியுள்ளது. இதேவேளை எதிர்காலத்தில் தொழிற் கட்சியும், சீர்திருத்தக் கட்சியுமே அரசியலில் முக்கிய பங்காற்றும் எனப் பிரதமர் குறுஹாலம் கூறியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## அகதி

வலதுசாரிக் கட்சியின் இந்த வீழ்ச்சிக்கு அதன் தற்போதைய தலைவர் யான்.பி.சீசேயின் செயல்பாடுகளும் காரணம் எனலாம். வருமானவரி ஏமாற்று (நிரூபிக்கப் படவில்லை) பங்கு கைமாற்றம், சொந்த நிறுவனங்களின் முறையான கணக்குப் பதிவுகளை கணக்காய்வாளரிடம் சமர்ப்பிக்காமை (இதற்காக பத்திரிகையாளரிடமும் தொலைக் காட்சியிலும் மன்னிப்புக் கோரியிருந்தார்.) போன்ற விடயங்கள் கட்சியைப் பாதித்திருக்கும் எனலாம். இவ்வருடம் நிகழவுள்ள கட்சியின் வருடாந்த மாநாட்டில் யான்.பி.சீசே கட்சித் தலைவர் பதவியை விட்டு விலகலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. இப்பதவிக்கான தேர்தல் ஏற்பாடுகளை கட்சி மத்திய குழு தயாரித்து வருகிறது.

புதிய அரசு பற்றியும் அதன் போக்குகள் மற்றும் ஏனைய கட்சிகளுடனான அதன் உறவுகள் பற்றியும் அடுத்த இதழில் பார்ப்போம்

## நோர்வே'90

* நோர்வேயில் 1990ல் உல்லா என்ற இடத்திலேயே ஒரே நாளில் மிக அதிக மழை பெய்துள்ளது. நாட்டின் தென்மேற்குப் பகுதியில் உள்ள இந்த இடத்தில் மார்ச் மாதம் 16ம் திகதி 24மணி நேரத்தில் 138 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியது.

* நோர்வே வானொலியில் 1990ல் மிக அதிக தடவைகள் ஒலிபரப்பான பாடல் பீற்றில்ஸ் இசைக் குழுவினரின் 'Yesterday' என்ற பாடல்தான். மொத்தமாக 15,653 நிமிடங்கள் (260 மணித்தியாலங்கள்/ 10.8 நாட்கள்) அதாவது 5,000 தடவைகட்கு மேல் இந்தப் பாடல் ஒலிபரப்பாகியது.

* நோர்வேயில் 1990ல் மிக அதிகம் விற்பனையாகிய கார்கள் 'Toyota' வகையைச் சேர்ந்தவை. இதிலும் 'Toyota Hiace' வகைகளே முதலிடம் வகிக்கின்றன.

* 1990, நோர்வே பெண்கள் பற்றி உலகத்தின் கவனத்தைத் திருப்பிய வருடம். வட துரொண்டலாக் மாவட்டத்தின் ஷொர்டால் பகுதியைசி சேர்ந்த மோனா குறுட் என்ற பெண் 1990ன் உலக அழகியாகத் திகழ்ந்தார்.

* 'ஸ்கன்டினேவியன் ஸ்ரார்' கப்பல் தீவிபத்து நிகழ்ந்த பின், விபத்து பற்றிய செய்திகளை வெளியிட்ட பத்திரிகைகளில் வேகே (VG) பத்திரிகை ஐந்தரை லட்சம் பிரதிகள் விற்று நோர்வேயில் ஒரு சாதனையை ஏற்படுத்தியது. இந்தச் சாதனை தொடர்ந்து இரு தினங்கள் நிகழ்ந்தது. இது நோர்வேயின் வரலாற்றிலேயே பத்திரிகை மிக அதிகம் விற்ற தொகையாகும்.

(இந்த) நாட்டான்



# றெட்பாணா

- கோகுலன் -



* றெட்பாணா முக்கியமாக மூன்றாம் உலகநாடுகளில் சிறுவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகப் பணிபுரிகிறது. இதன் பணிகள் 1959இல் ஐ.நா.வில் நிறைவேற்றப்பட்ட சிறுவர்கட்கான அடிப்படை உரிமைகள் பற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் அமைந்துள்ளன.

* றெட்பாணாவின் முதல் அமைப்பான 'Save the children fund' முதலில் 1991இல் பிரிட்டனில் நிறுவப்பட்டது. யுத்தத்தால் பாதிப்புற்ற சிறுவர்களுக்கு உதவ நிறுவப்பட்ட இந்த அமைப்பின் சமாந்தர அமைப்பாக றெட்பாணா 1946இல் தனிப்பட்ட விதத்தில் நோர்வேயில் உருவாக்கப்பட்டது. இதன் நோக்கங்கள் நோர்வேயிலும் ஏனைய நாடுகளிலும் போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவுவதாக இருந்தன.

* 1961இல் றெட்பாணா நோர்வேக்கு வெளியே தனது பணிகளை ஆரம்பித்து முதல் ஆசிய, ஆபிரிக்க, தென்னமெரிக்க நாடுகளில் சிறுவர் நலன்பேணும் ஓரமைப்பாக இயங்கி வருகிறது. 1989இல் 21கோடி குரோணர்களை தனது வரவுசெலவுத் திட்டத்தில் பயன்படுத்தியுள்ளது.

* இலங்கை உட்பட 18நாடுகளில் இயங்கிவரும் றெட்பாணா, பெரும்பாலும் சுயஉதவித் திட்டங்களையே நடைமுறைப்படுத்துகிறது. இவ்வருடம் நோர்வேயில் பாலியல் வன்முறைக்கு ஆளாகும் சிறுவர்களுக்கு உதவவும் றெட்பாணா திட்டமிட்டுள்ளது.

* றெட்பாணாவின் நோர்வே அலுவலகத்தில் ஏறத்தாழ 70பேர் பணிபுரிகின்றனர். றெட்பாணாவின் செலவினத்தில் 4% இவர்களது ஊதியமாக வழங்கப்படுகிறது. றெட்பாணாவின் திட்டங்கள் ஏறத்தாழ 1000 ஊழியர்களால் மூன்றாம் உலகநாடுகளில் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இவர்களில் 20பேர் வெளிநாட்டவர்கள், முக்கியமாக நோர்வேஜியர்கள்.

* 1978இல் றெட்பாணாவின் (Save the children) கூட்டமைப்பு ஜெனீவாவில் தலைமையகத்தைக் கொண்டு உருவாக்கப்பட்டது. 21நாடுகளில் உள்ள றெட்பாணா/ Save the children அமைப்புகள் இந்தக் கூட்டமைப்பில் பங்கு வகிப்பதோடு, இவை வேறு உதவி நிறுவனங்களோடும், ஐ.நா. அமைப்புடனும் ஒத்துழைத்துப் பணிபுரிகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளை அளந்து கொட்ட வேண்டும் என்பார்கள். ஏனென்றால் இப்படி வார்த்தைகளை வெளியே விட்டவர்கள் பல அவஸ்தைகள் பட்டிருக்கிறார்கள். இவ்வாறான ஒரு அவஸ்தை இந்திய மாநிலமான ஒரிசாவின் முதல்வருக்கு ஏற்பட்டது. முதல்வர் பிஜு பட்நாயக் தனது உரையொன்றில், ஊழல் செய்யும் அதிகாரிகளை மக்கள் பிடித்து உதைக்கவேண்டும் என்று கூறியிருந்தார். இந்த வார்த்தைகளை அப்படியே பின்பற்ற விரும்பிய ஒரு நகரத்தின் சில இளைஞர்கள், நகர அதிகாரிகள் சிலரைப் பிடித்து தாம் உதைக்க அனுமதி தரவேண்டும் என தந்திமூலம் மாநில முதல்வரைக் கேட்டிருந்தனர். முதல்வரால் இந்நிலையில் தாம் முன்பு கூறியபடி அதிகாரிகளைப் பிடித்து உதைக்குமாறு பணிக்க முடியவில்லை. பதிலாக முதல்வர் அந்த இளைஞர்களை தனது அலுவலகத்துக்கு வருமாறு கட்டார். அவர்களால் குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரிகளையும் அவர் அதேநேரம் அழைத்திருந்தார். ஒருவேளை இளைஞர்களின் உதையை நேரில் பார்க்க ஆசையோ என்னவோ.

* 'என்ரை மாமா ஆமிசுட்டுச் செத்துப் போனார். நீ இஞ்சை கூட்டம்வைச்சுக் கொண்டிருக்கிறாய்'

இது அண்மையில் பாரீசில் நிகழ்ந்த ஒரு கூட்டத்தில் ஒரு 'பொதுமகனின்' கேள்வி. கூட்டம் மலையகம் தந்த சிறுகதை எழுத்தாளர் அமரர் என்.எஸ்.எம்.இராமையா நினைவாக நிகழ்ந்தது. பேசிக்கொண்டிருந்தவர் யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்து சிறைசென்று திரும்பிய மு.நித்தியானந்தன். அமரர் இராமையாவின் சிறுகதைகளை முதன்முதல் தொகுப்பாகக் கொண்டுவருவதில் பெரும்பங்கு வகித்தவர். பாரிசில் இராமையா அவர்களை நினைவுகூரும் கூட்டத்தில் சிலர் (தங்களைப் பொதுமக்கள் என்று அழைப்பதையே விரும்பும் இந்தச் 'சிலர்' யார் என்று ஊகிப்பதை உங்களிடமே விட்டுவிடுகிறேன்) கூட்டத்தைக் குழப்புவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு வந்ததோடு, கூட்டத்தில் முக்கிய பங்கு வகித்த ஒரு இலக்கிய நண்பரைத் தாக்கியும் உள்ளனர். ('நாம் வன்முறைமீது காதல்கொண்ட மனநோயாளிகள் அல்லர்' என்றவரிகள் உங்கள் நினைவுக்கு வருகிறதென்றால் அதற்கு நான் பொறுப்பல்ல.)

காடைத்தனம் என்பது தமிழர்களது தேசிய அடையாளங்களில் ஒன்றாக எதிர்காலத்தில் காட்டப்படும் அபாயம் இருக்கிறது. யாழ்ப்பாணத்துக்கு அப்பால் எதுவுமே இல்லை என்ற நினைப்பே இந்த 'வீரர்'கட்கு இருந்திருக்க வேண்டும். இலங்கையில் மிகமோசமாக பொருளாதாரச் சுரண்டலுக்கு உள்ளாகும் ஒரு மக்கள் கூட்டத்தைப் பற்றியும், அவர்களது இலக்கியம் பற்றியும் பேசுவது யாழ்ப்பாணக் காதுகளுக்குக் குளிர்ச்சியாக இருக்காதுதான். அப்படியான எண்ணங்கொண்டோர் அந்தக் கூட்டத்துக்குச் சென்றிருக்கத் தேவையில்லை. அப்படிச் செய்வதை விடுத்து கூட்டத்துக்குச் சென்று குழப்புவது எந்த (அ)நாகரீகம் என்று தெரியவில்லை. (ஒருவேளை ஐரோப்பாவுக்கு வந்து இவர்கள் பழகிய முன்னோடி நாகரிகம் இதுதானோ தெரியவில்லை) இவர்களின் கேள்விப்படி, அதாவது 'அங்கே சாகிறார்கள், இங்கே எதற்குக் கூட்டம்?' என்ற கேள்விப்படி நாங்கள் செய்வதற்கு ஒரேயொரு காரியம் மட்டுமே உள்ளது. அது சர்வதேசரீதியில் தமிழ் ஒப்பாரிகளை ஒழுங்குசெய்வது மட்டுந்தான். அதுசரி, இந்த 'வீரர்'கள் சினிமா நடிக, நடிகைகள், பாடகர்கள் இங்கு வந்து கொட்டமடித்தபோதும் இதேகேள்விகளைக் கேட்டிருப்பார்களா? நிச்சயம் (மனதுக்குள்) கேட்டிருப்பார்கள். ஏனென்றால் இவர்கள் தன்மானத் தமிழர்கள் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

* இந்தியாவுக்கும் நோர்வேக்கும் கிரக நிலைகள் ஒரே மாதிரி இருந்தனவோ என்னவோ தெரியவில்லை, ஆட்சி மாற்றம் ஏறத்தாழ ஒரே காலப் பகுதியில் நிகழ்ந்திருக்கிறது. இரு நாடுகளிலும் ஆட்சியில் இருந்தது சிறுபான்மை அரசுகளே. ஆனால் ஆட்சி மாறிய விதம்தான் வித்தியாசம். இந்தியவில் ஏற்பட்டது உண்மையில் பொம்மை அரசே. இந்திரா காங்கிரஸின் ஆசியுடன் சந்திரசேகர் அமைத்த ஆட்சி உண்மையில் உறுதியான தீர்மானம் எதையும் சுயமாகச் செய்ய முடியாதது. ராஜீவ் விரலசைத்தால் ஆட்சி கவிழும் என்ற ஊசலாட்டம் ஆட்சியின் விதி என்ற நிலையில் இந்திய மக்கள் இந்த ஆட்சியை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். ஆனால் இவற்றுக்கெல்லாம் பின்னணியில்




ஒரு முக்கிய காரணம் இருக்கிறது, அது சந்திரசேகரின் பதவி ஆசை. இதனால்தான் எந்த நிபந்தனைக்கும் வளைந்து அவர் இந்த ஆட்சியை ஏற்படுத்தியிருக்கிறார். இந்தியாவைப் பொறுத்தவரை சந்திரசேகரின் புதிய அரசானது காங்கிரஸ் தவிர்ந்த ஒரு மாற்றுக் கட்சி பலமாக, வளர்வதற்கு இருந்த வாய்ப்புகளை நாசம் செய்துவிட்டது. நோர்வேயில் கடந்த பல மாதங்களாகவே தொழிற் கட்சியின் செல்வாக்கு கூடுவதோடு வலதுசாரிக் கட்சி எதிர் காலத்தில் ஆட்சி அமைக்கும் சந்தர்ப்பம்பெறுமா என்பதையே கேள்வியாக்கிவிட்டது.

* ஐரோப்பாவில் இருப்பதால் மாத்திரம் யாரும் பாதுகாப்பாக உயிருடன் இருக்கமுடியும் என்று தோன்றவில்லை. இங்கும் வன்முறை தாய்நாட்டில் இருந்து இறக்குமதியாகிறது. நிறவாதம் இருக்கிறது. தமிழர்களது காரோட்ட வேகத்தில் பலர் உயிரிழக்கிறார்கள். சில மர்ம மரணங்களும் நிகழ்கின்றன.

இந்நிலையில் எல்லோரும் செய்யக்கூடியது ஆயுட்காப்புறுதிதான். தனது உயிரைக் காப்பாற்ற முடியாவிடினும் தன்னைச் சார்ந்தவர்கள் பொருளாதார ரீதியில் வெகுவாகப் பாதிக்கப்படக் கூடாது என்ற நல்லெண்ணத்துடன் செய்யப்படுகிற காப்புறுதித் தொகை சிலசமயங்களில் உரியவர்களது கைகளுக்கு சென்றடைவது பெரும் சிரமமாகிறது. எமது நாட்டைப்போல காப்புறுதியை பெற்றுக் கொள்வதில் பெருமளவு சிரமம் இங்கில்லை. ஆனால் அதைப் பெற்று உரியவர்களிடம் சேர்ப்பிக்க வேண்டியவர்களே சிலசமயம் தமிழ்ப்படப் பாணியில் திடீர் வில்லனாகி விடுவதுதான் வில்லங்கம். இப்படி ஒரு சம்பவம் இங்கு நிகழ்ந்ததென என் நண்பர் ஒருவர் சொல்லக்கேட்டு எனக்கு இரண்டு மூன்று நாட்களாக நித்திரையில்லை (நானும் காப்புறுதி செய்திருக்கிறேன்). 'காசேதான் கடவுளடா' என்று தெரியாமலா பாடினார்கள்?



## நடையர் பார்வையில்



## நாட்டு நடப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் ஒரு பக்கம்

- விதுரன் -



வடக்கு- கிழக்குப் பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த ஆங்கிலேயர்கள் கொழும்பைத் தாக்க 10,000 க்கும் மேற்பட்ட படைவீரர்களுடன் திருகோணமலையில் இருந்தும் வங்கத்தில் (இந்தியா) இலிருந்தும் கொழும்பை நோக்கிப் புறப்பட்டனர். இதனைக் கேள்வியுற்ற ஒல்லாந்தர் படைத்தளபதி Waan Anjelbik கொழும்பைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டான். தனக்கு பிரான்சிய படைகளது உதவி கிடைக்கும் என்றும், இந்தியாவில் திப்பு சுல்தான் ஆங்கிலேயரை இடைமறித்து தாக்கலாம் எனவும் எதிர்பார்த்தான். ஆனால் இவையெதுவும் நடைபெறவில்லை. மாறாக சேவை மாற்றத்தின் காரணமாக இதுவரை ஒல்லாந்தருக்கு உதவியாயிருந்த டீ மோறனுடைய கூலிப்படைகள் தற்போது ஆங்கிலேயர்கள் பக்கம் சாய்ந்தனர். ஈற்றில் சரணடைதலே புத்தியெனக் கருதிய ஒல்லாந்து தளபதி சரணடைந்தான். கொழும்பு கைப்பற்றப்பட்ட சிலநாட்களுக்குள் களுத்துறை, காலி என்பனவும் ஆங்கிலேயர் வசமாகின.

இலங்கையை பிரித்தானியாவின் நேரடி பரிபாலனத்துக்கு உட்படுத்த பிரித்தானிய அரசு விரும்பிய போதும் இலங்கையைக் கைப்பற்றுவதில் கிழக்கிந்திய வர்த்தக சங்கம் அதிகளவு பங்குபற்றியமையால் இலங்கை இந்தியாவுடன் இணைக்கப்பட்டு சென்னை நகர ஆள்பதி கோபாட்டின் மேற்பார்வையில் வர்த்தக சங்கத்தின் பரிபாலிப்பில் விடப்பட்டது. இதனடிப்படையில் சென்னை ஆள்பதி இலங்கையரசின் அதிகாரியாக 27.10.1795 இல் றொபேர்ட் அன்ட்ரூசையும் அவருக்கு உதவியாக வேறுசில அதிகாரிகளையும் நியமித்தார்.

சென்னையில் இருந்து வந்த அதிகாரிகள் பாரம்பரியமாக மக்களால் பின்பற்றப்பட்டு வந்த முறைகளை மாற்றி விரைந்து செல்வம் தேடும் நோக்குடன் பலவரிகளை விதித்ததுடன் எதுவித ஆய்வுமின்றி சிங்கள உத்தியோகத்தர் (முதலிமார்கள்) பலரை வேலையினின்றும் நீக்கிவிட்டு அவ்விடங்களில் தமிழர்களை நியமித்தனர். இதுமட்டுமன்றி மக்களிடம் வரிதிரட்ட 'அமில்தாரர்களை' நியமித்து மக்களை உடல்ரீதியாக துன்புறுத்தி வரி அறவிட்டனர். அக்காலத்தில் நிலவிய வரிகள் சில: நாய்வரி, ஆபரணவரி, வேட்டைவரி, புகையிலைவரி, துவக்குவரி, திண்ணைவரி, தானியவரி என்பனவாகும். இத்தகைய வரிகளைச் செலுத்த முடியாது அவதியுற்ற மக்கள் வரிமறுப்பு அமைப்புகளைத் தோற்றுவித்துப் போராடினர். வன்னியில் சுயஆட்சி நடாத்திய பண்டாரவன்னியன் அமில்தாரனை வாளால் வெட்டிக் கொன்றான். மட்டக்களப்பு, வன்னிப் பிரதேசங்களில் வரிமறுப்பு அமைப்புகள் தோன்றின. சிங்களப் பகுதிகளில் ஹேவகம, றயிகம, சல்பிட்டி, சியன்னே, கோறளை பகுதிகள் பெருமளவில் ஆர்ப்பரித்து எழுந்தன. வரிதிரட்டச் சென்ற அமில்தாரனை பிடித்துக் கட்டிவைத்தனர். படையினரது உதவியுடன் அமில்தாரன் விடுவிக்கப்படினும் மக்களது கொந்தளிப்பு மறையவில்லை. கலகம் பலமடங்காகப் பரவியது. எனினும் 1798 பங்குனி மாதமளவில் கலகக்காரர்கள் கைதுசெய்யப்பட்டு தூக்கில் இடப்பட்டனர்.

இக்காலத்தில் ஐரோப்பாவில் நெப்போலியன் முறியடிக்கப்பட்டு அமைதிநிலை தோன்றியது. எனவே வர்த்தக சங்கத்திடம் இருந்து படிப்படியாக இலங்கையைப் பொறுப்பெடுக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டு இலங்கையின் முதலாவது ஆள்பதியாக பிரெட்றிக் நோர்த் 26.03.1798 இல் நியமிக்கப்பட்டார். எனினும் 12.10.1798 அன்றுதான் இலங்கைவந்த படைப் பரிபாலன ஆளுநர் டீ மோறன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் எடுத்தார்.

ஆள்பதி நோர்த் சிறந்த அறிவாளி மட்டுமன்றி பலமொழிப் புலவராவர். பல கீழைத்தேய, மேலைத்தேய மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற இவர், தமது 24ஆவது வயதிலேயே பாராளுமன்றப் பிரதிநிதியாக தெரிவுசெய்யப் பட்டிருந்தார். இவரது தந்தை இங்கிலாந்தின் பிரதமராய் இருந்த காலத்தில் தமது திறமைக் குறைவால் அமெரிக்க நாடுகளை இழக்கக் காரணமாய் இருந்தவர்.

இலங்கையின் முதல் ஆள்பதியாக பிரெட்றிக் நோர்த் அவர்கள் நியமிக்கப்பட்ட போதே இலங்கையின் முதற் காரியதரிசியாக 'கூகிளே கோண்' நியமிக்கப்பட்டார்.

ஆள்பதி நோர்த் அவர்கள் இதுகாலவரை நிலவிவந்த பலதரப்பட்ட நிர்வாகக் குளறுபடிகளையும் நீக்கி ஆங்கில ஆட்சியை ஸ்திரப்படுத்தும் வகையில் நாட்டின் பரிபாலனத்தில் பாரிய மாற்றங்களைச் செய்தார். இத்தகைய மாற்றங்களுக்குத் தடையாக இருந்த வர்த்தக சங்க ஊழியர்களை இடம்மாற்றியும் பதவியைவிட்டு நீக்கியும் வருமானவரித் திணைக்களம், அளவையாளர் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம், காணிப் பதிவு திணைக்களம் போன்ற பலதரப்பட்ட திணைக்களங்களை திறந்து நிர்வாகத்தை ஒழுங்குமுயப் படுத்தியதுடன் நாட்டின் பல்வேறுபட்ட இடங்களில் சிறு நீதிமன்றங்களையும் உயர்நீதிமன்றங்களையும் (உயர்நீதிமன்றம் பிரதம தளபதி, பிரதம காரியதரிசி, ஆள்பதி ஆகியோரை உள்ளடக்கியதாக) நிறுவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயரது ஆட்சிக்கு உறுதியான அத்திவாரம் இட்டார்.

மேற்குறிப்பிட்ட நிர்வாகச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போது ஆள்பதிக்கும் வர்த்தக சங்கத்தாருக்கும் இடையே முரண்பாடுகள் அதிகரித்தன. இதையடுத்து பிரித்தானிய அரசால் 18.02.1801 ஆம் ஆண்டு ஆள்பதி நோர்த்துக்கு அனுப்பப்பட்ட கட்டளைப் பத்திரத்தில், இலங்கை வர்த்தக சங்கத்தின் ஆளுகையில் இருந்து நீக்கப்பட்டுள்ளது என்றும், இலங்கைத் தீவின் இராணுவ, அரசியல், பொருளாதாரப் பரிபாலனத்துக்கு இனி ஆளுநரே பொறுப்பு என்றும், இலங்கை பிரித்தானியாவின் நேரடி பரிபாலனத்துக்கு உட்பட்டுள்ளது என்றும் பிரித்தானிய முடியின் (பிரித்தானிய அரசர் அல்லது அரசி) பெயரால் இலங்கையை ஆட்சிசெய்யும் அதிகாரம் ஆள்பதிக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கை முடிக்குரிய நாடாகியபின் ஆள்பதியின் அதிகாரம் பலமடங்கு அதிகரித்தது. பிரித்தானிய குடியேற்ற நாடுகள் சட்டத்தை இயற்ற அதிகாரம் பெற்றிருந்த போதும் முடியின் வேத்தியல் அனுமதியை இச்சட்டங்கள் பெற்ற பின்பே நடைமுறைப் படுத்தப்படும். இவ்வேத்தியல் அனுமதிக்கு முடியின் பெயரில் ஒப்பமிட ஆள்பதிக்கு அதிகாரம் இருந்த போதும் முடியே சகல அதிகாரமும் உடையது. முடியின் பெயரால் கடமையாற்ற மட்டுமே ஆள்பதியால் முடியும். தவிர அவருக்கு அதிகார எல்லையுண்டு.

ஐரோப்பாவில் அமைதி ஏற்பட்டதைத் தொடர்ந்து சமாதானப் பேச்சுகள் தொடங்கின. பிரெஞ்சுக்காரர்கள் ஐரோப்பாவைக் கைப்பற்றும் நோக்குடனேயே எகிப்துமீது படையெடுத்திருந்தனர். இந்நிலையில் பிரித்தானியப் பேரரசு இந்தியாவில் நிலைபெற வேண்டுமாயின் இலங்கை அதற்கு முக்கிய தளமாக அமையும் எனக் கண்ட ஆங்கிலேயர், தாமே இலங்கையை நிரந்தரமாக ஆளவேண்டும் என்ற நிபந்தனையை 1802 தைமாதம் இடம்பெற்ற 'அமியன்ஸ் சமாதான' த்தில் பெற்றுக் கொண்டனர்.

அக்காலத்தில் ஆள்பதி கட்டுக்கடங்காத அதிகாரம் உடையவராய் இருந்தார். ஒப்பீட்டு ரீதியில் கூறினால் அமெரிக்க அரச தலைவரைவிட ஆள்பதி அதிக அதிகாரமுடையவராக விளங்கினார். தான் விரும்பியபடி யாரையும் எவ்விடயத்திலும் நிர்ப்பந்திக்கவும் நிர்ப்பந்திக்காமல் விடவும் நாட்டின் முதுகெலும்பாய் விளங்கும் சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகியவற்றின் நிறைவேற்று உத்தியோகத்தனாகவும் விளங்கினார். ஆள்பதியின் இவ்வெல்லை கடந்த அதிகாரங்களை அக்காலத்தில் வாழ்ந்த முத்துக்குமார கவிராச சேகரம் பின்வருமாறு கவிதையில் கூறுகிறார்:-

மருகட்டுமாலை முடிமன்னர்
கட்டளை வந்தபடி
தெருக்கட்ட டாங்கன் மலைப்பாரை
யொப்பனை செய்தடித்து
நடுக்கட்டு மாமறுத் தாற்குற்றம்
ஆக்கினை நம்பிக்கையென்
றிருக்கட்டு மாமிதற் கென்செய்கு
வேன் தன்னை யேரம்பனே.


*சுமைகள்*
நெதர்லாந்தில் இருந்து வெளியாவது, தமிழ்ச்சங்கம் ஒன்றின் வெளியீடு.
தொடர்புகள்:- Tamil Union, Achter Den Winkel- 370, 6372 R.V.Landgraaf, The Netherlands.




# லகைக் காத்த மெண்டிஸ்



*15ஆயிரம் பத்திரிகையாளர்கள், சூழலியலாளர்கள், கல்விமான்கள், இராஜதந்திரிகள் இவ்வாறு பலதரப்பட்ட மக்கள் அமெசனுக்கு வடமேற்கேயுள்ள சாப்புரி எனும் குக்கிராமத்தில் டிசம்பர் மாதம் அணிதிரண்டனர். இரண்டு வருடங்களுக்கு முன்னர் கொலை செய்யப்பட்ட 'முதலாவது சூழலியற் போராளி' சிக்கோ மென்டிசின் நினைவு தினத்தை ஒட்டியே இவ்வாறு பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடினர்.*

*சிக்கோ மென்டிஸ் அமேசன் காடுகளைச் சூழவுள்ள ஏழை இறப்பர்த் தொழிலாளிகளின் அழிந்துபோகும் வாழ்நிலைக்கு புத்துயிர்ப்பு ஊட்டியவர். சர்வதேசக் கம்பனிகளால் அமேசன் காடுகள் மர உபயோகங்களுக்காக கட்டுக்கடங்காது அழிக்கப்பட்டு வந்தன. அத்தோடு இக்காடுகளை எடுத்து கால்நடை வளர்ப்பின்மூலம் 'இறைச்சி' உற்பத்தியிலும் ஈடுபட்டன. இதற்கு எதிராக சிக்கோ மக்களை அணிதிரட்டியதுடன் பல எதிர்ப்பு ஊர்வலங்களையும் முன்னின்று நடாத்தினார்.*

*மழைக்காடுகள் அழிப்புக்கு எதிராக சிக்கோ நடாத்திய தொடரான போராட்டங்கள் அரசாங்கத்தை இப்பிரச்சனையில் கவனம் செலுத்த வைத்தது. இறுதியில் அமேசன் மழைக்காடுகளை இறைச்சி உற்பத்தியில் பயன்படுத்துவோரிடமும் இருந்து காப்பாற்ற அரசு சில முயற்சிகளை மேற்கொண்டது. இதனால் மழைக்காடுகள் மூலம் மொத்த இலாபம் சம்பாதித்தோர் எரிச்சலுறத் தொடங்கினர். சிக்கோவுக்கு பலதடவை பயமுறுத்தல்கள் வந்தன. இதனால் இவருக்கு இரண்டு பாதுகாப்பாளர்களை மக்கள் ஏற்படுத்திக் கொடுத்தனர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988ஆம் ஆண்டு டிசம்பர்மாதம் 22ஆந் திகதி சிக்கோ தனது பாதுகாவலர்களுடன் அமர்ந்து 'டொமினோ' விளையாடிவிட்டு மிகுந்த வெப்பமாக இருந்ததால் குளிப்பதற்காக வீட்டுக்கு வெளியே வந்தார். அப்போது அங்கே காத்திருந்த கயவர்கள் அவர் உயிரைப் பறித்தனர். இவர் ஏற்கெனவே ஐந்து தடவைகள் கொலை முயற்சியில் இருந்து உயிர் தப்பியவர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. ஆயினும் ஆறாவது தடவை அவர் தப்பிக்காத வகையில் கொலையாளிகள் அவர் உயிர்பிரியும்வரை கொன்றனர். இவரது கொலைக்கு ஊர்வி அல்வஸ் என்பவனும் அவனது மகனுமே காரணம் எனத் தெரியவருகிறது. இவரது கொலை சிலிநாட்டில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

இன்று சிக்கோ மென்டிஸ் மழைக்காடுகளை அழிவிலிருந்து காக்கப் போராடும் மக்களுக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறார். சிலிநாட்டில் மட்டுமல்லாது உலகெங்கும் உள்ள சூழலியலாளர்கள் இவர் ஒரு நம்பிக்கை நட்சத்திரம் என்பதற்காகவே இரண்டாவது நினைவுதினத்தில் இவ்வாறு அணிதிரண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரைப் பற்றிய புத்தகம் ஏற்கெனவே வெளிவந்துள்ளது. அத்துடன் அது இப்போது படமாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தன்னை அழித்து உலகை அழிவிலிருந்து தடுக்க முயன்ற போராளி மென்டிஸ்!

- வசந்தா -

## கிறான் மரமும் கிளுவை வேலியும்

நிலவை மறைத்து
பெரும் படையாய் இறங்கும்
பனித்துளியை வழிமறித்து
இலைவிரலில்
ஏந்தும் கிறான் மரம்.

ஊரெல்லாம் வெளிச்சமிட
நிலம் பிளந்து தலைநிமிர்த்திய
மின்கம்பம்
ஒளி சிந்த
மினுங்கும் வெள்ளியென.

உறையவைக்கும் குளிரெனினும்,
எல்லா மரங்களும்
இலையுதிர்த்த பின்னாலும்
பனியுதிர்வுக்காய்க்
காத்திருக்கும் கிறான் இலைகள்
காதலுடன் -

என் வீட்டின் முன்னாலோ
வேலியென நட்ட
கிளுவை
பொன்வண்டு சுமந்து
கோடையிலும் பார்த்திருக்கும்.
பிறைநிலவின் கதிர்பட்டும்
பொன்னின் துகள்களென
மின்னித் தெரியும்.

கோடையிலும் இறவாத
கிளுவைகளா
குளிரினிலும் தலைநிமிரும்
கிறான் மரமா
சிறந்ததென்று கேட்டாயோ?

துயரம் சுமந்த மனிதரின்
நினைவுகட்குத் துணையிருக்கும்
இயற்கையின் விதிகட்கு
விடையில்லை என்னிடம்.

இளவாலை விஜயேந்திரன்

ஆதவனின்

# மண்மனம்



கள்ளுத் தவறணையால குடிச்சுப் போட்டு ஆடி... ஆடி வாற சோமனை இனிக் காணேலாது. உருவமும் பாட்டும் மட்டும் மனசில நிக்கும். விளக்குப் பிம்பத்தைப் பார்த்தாப் பிறகு கண்களை மூடின உடனை வாற பிம்பம் மாதிரி அவன் நிப்பான். மனிசர் செத்தாப்பிறகு ஒரு பிம்பந்தான். நானுந்தான்.

சோமன்!

அவன்ரை பேரோடை அவனுக்கொரு பேர் குடிகாரச் சோமன்.

சமூகங் கொடுக்கிற பட்டம்.

பிம்பங்களுக்குக் கூடப் பட்டம்.

அறிஞர் அண்ணா.

கவிஞன் பாரதி.

தத்துவஞானி சோக்கிரட்டீஸ்

பெஞ்சனியர் வேலுப்பிள்ளை.

தியாகி சிவகுமார்.

அவர்களை அவர்களாகப் பாக்கிற பழக்கம் எங்கடை சனத்துக்கு இன்னும் வரேலை. ஏதாவது ஒண்டோடை சேத்துத்தான் பாக்கும். இயற்கையை ரசிக்கேக்கைகூட ஒரு ஓவியம்போல நல்லா இருக்கு எண்டுதான் சொல்லும்.

சோமன் பாடுற பாட்டுகளில அரைவாசி இயற்றல்தான். ஆனால் அடிக்கடி அவன் பாடுற வரி 'நாடக மெல்லாங் கண்டேன்...' என்பது. எனக்கும் பிடிச்ச பாட்டுத்தான். ஏன் அவன் இதைத் திரும்பத் திரும்பப் பாடுறான் எண்டுறது எனக்கு பலகேள்விகளைக் கேக்க வைக்குது. அவன்ரை சாவும் நாடகம் மாதிரிப் போனது மனசுக்குப் பெரிய கஷ்டமாயிருக்கு. இரவு ஊரடங்கு நேரத்தில தானாம் அது நடந்தது. என்ன நடந்தது? விடியப்புறம் செகிட்டு மாணிக்கத்தின்ரை கடைசிப்பெடி கள்ளுச்சீவப் போனபொழுது பனைவட்டுக்கை இருந்து கண்டவனாம். சுடலை மடத்துக்கை ஒரு ஆள் படுத்திருக்கிற மாதிரி. கிட்டப் போய்ப் பாத்தா சோமனாம். வெறியில கிடக்கிறான் எண்டுதான் முதல் நினைச்சவனாம். பிறகு ஏதோ ஒரு ஐமிச்சத்திலை கூப்பிட்டுப் பாக்கத்தான் பிரேதம் எண்டு தெரிஞ்சுதாம்.

ஊரெல்லாம் கூடி கடைசியில தற்கொலை எண்டு முடிவெடுத்தது. அதற்கான postmortom எல்லாம் சான்றாக அமைஞ்சுது. கொலைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிவிட்ட இந்தக் கா லத்திலை தற்கொலையைப் பற்றி ஆர் நினைக்கப் போகினம். அதிலும் குடிகாரச் சோமன் இருந்தென்ன இல்லாட்டி என்ன? எண்டுறதுதான் பலபேற்றை அபிப்பிராயமும். என்னாலை தாங்க முடியேலாமக் கிடக்கு இவன் ஏன் தற்கொலை செய்தான்.

எந்த இரகசியத்தைக் காப்பாற்ற—
எந்த சயனைட்டைக் கடித்தான்?

சோமா - நீ இன்னும் கொஞ்சக் காலம் இருந்திருக்கலாம். நான் உனது ரசிகன். பலவருடங்களாக நான் உன்னை ரசிப்பவன். வாழ்வு நாடகத்தை தண்ணி அடிச்சு மெருகூட்டிய கலைஞன் நீ. உன்னை இழந்து தவிக்கும் இரவு ஒழுங்கை நாய்களும்... புழுதி படிஞ்ச பூவரசங் கொப்புகளும்... உனக்கென்ன ஊரடங்கு உத்தரவு. நீ புரட்சியாளனும் இல்லை... கிளர்ச்சியாளனும் இல்லை. தியாகியும் இல்லை. எதிலும் பங்குபற்றாமல் எப்படி வாழ்ந்து காட்டியிருக்கிறாய். எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு ஆனா வெளியில சொல்ல மாட்டன். சொல்லவும் ஏலாது. நீ ஒருநாள் உன்னை மறந்து எனக்காக ஒரு பாட்டுப் பாடின கள்ளுக் கொட்டிலிலைதான் உன்ரை நினைவா 2போத்தல் கள்ளுக் குடிச்சனான் இண்டைக்கு. நீ வாழ்க! உன் பிம்பம் வாழ்க! இந்த ஊருக்கு ஒரு மண்வாசனை இருக்கும் எண்டா அதிலை நீ குடிச்சிட்டு எடுத்த சத்தியின்ரை மணமும் கட்டாயம் இருக்கும். ஏனெண்டா உன்ரை சத்தியின்ரை வாசனை சத்தியத்தின் வாசனை.

(இன்னும் வரும்)







நியுயோர்க் நகரில் அண்மையில் 15வயதுடைய இளைஞர் கொல்லப்பட்டும் மூவர் படுகாயமடைந்ததுடன் இதேநாளில் பல்வேறு சம்பவங்கள் அமெரிக்காவின் பல்வேறு பாகங்களிலும் நடந்தன. துப்பாக்கிப் பிரயோகங்கள்கூட நிகழ்ந்தன. இதற்கான காரணம் மதக்கலவரமோ இனக்கலவரமோ அரசியற் பிரச்சனைகளோ அல்ல. இதற்கான காரணம் பிரபல திரைப்பட இயக்குநர் பிரான்ஸிஸ் போர்ட் கப்போலஸின் (Francis Ford Cappolas) கடைசியாக வெளிவந்த Corleone குடும்பத்தைப்பற்றிய "God Father 3" திரைப்படமாகும். இது வெளியான முதல்நாளில் திரையரங்குகளில் மோதல்கள் நடைபெற்றன. திரைப்பட ரசிகர்கள் 16வருடங்களுக்குப் பின்னரும் Michael Corleoneவைப் பற்றியும் அவனது மா:பியா செயற்பாடுகள் எவ்வாறு நடந்தன என்பதுபற்றியும் அறியும் ஆவலில் இவ்வாறான மோதல்கள் நிகழ்ந்தன.

70களில் பிரபல நடிகரான Marlon Brando நடிப்பில் வெளியான 'God Father 1' திரைப்படவுலகை ஒரு கலக்குக் கலக்கியது நினைவிருக்கலாம்.

<u>திரைப்பட விழா</u>

ஜனவரிமாதம் 10ஆந் திகதி சென்னையில் தொடங்கும் 22ஆவது உலகத் திரைப்பட விழாவில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 19நீளத் திரைப்படங்களும், 12குறுந் திரைப்படங்களும் திரையிடப்படவுள்ளன.

சென்னையிலுள்ள 6திரையரங்குகளில் வர்த்தகக் கண்காட்சிகளும், பல்கலைக்கழக நூற்றாண்டுவிழா மண்டபத்தில் சிறப்புக் காட்சிகளும் இடம்பெறும். விழா ஆரம்ப நிகழ்ச்சிகளில் இந்தியப் பிரதமர் கலந்துகொண்டு தமிழ்த் திரைப்பட வரலாறுபற்றிய நூலொன்றை வெளியிடுவார்.

இவ்விழாவில் சென்னை தொலைக்காட்சி ஒளிபரப்பிய பாலுமகேந்திராவின் 'சந்தியாராகம்' திரையிடப்படவுள்ளது.

<u>ரொறன்ரோவில் தமிழ்ப்படம்</u>

இவ்வருடம் ஏப்ரல் மாதம் ரொறன்ரோவில் நிகழ உள்ள இலங்கைத் திரைப்பட விழாவில் தமிழ்த் திரைப்படங்களும் காட்டப்பட உள்ளதாக தகவல் துறை ராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

சொல்வதோடு நின்றுவிடுவது தென்னிலங்கை அரசியல்வாதிகட்குக் கைவந்த கலை, இந்தவிடயமாவது செயலாக உருப்பெறுமா?

திரைப் பித்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org